Registered No. M. 73 'SIDDHANTHAM'
Vol. 26—No. 10

OFFICE OF THE ... 8 DEC 1953

# சித்தாந்தம்

748 சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 26 | விஜய ஐப்பசி 1953 அக்டோபர் | இதழ் 1(

# திரு. வி. க.


# "நினைவு மலர்"

'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

இராமச்சந்திரன் செட்டியார், பி.எ., பி.எல்.
...யர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.

...சித்தாந்த மகா சமாஜம்
...ரோடு, இராயப்பேட்டை, சென்னை-14

.673ஈ211, N28
N53.26.10.
186895



## சமாஜச் செய்திகள்

திரு. வி. க. அமருலகடைந்தமை குறித்து அவருடைய மகாத்மா இறைவனடியில் இன்புற்றிருக்க வேண்டுமென்று பிரார்த்தனை செலுத்த, சமாஜத்தின் சார்பிலும், ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் சார்பிலும், சபையின் குகானந்த நிலையத்தில் 27-9-53 மாலை 6 மணிக்கு அன்பர்கள் திரளாகக் கூடினர்.

தர்மரட்சாமணி K. பாலசுப்பிரமணிய ஐயர் B.A., B. L., M. L. C. தலைமை வகித்தார். பல அன்பர்கள் திரு. வி. க. வின் அன்பு வாழ்க்கையைக் குறித்தும் அவர் தம் அரிய சேவைகளைப் பற்றியும் பேசினார்கள். பின் பிரார்த்தனையோடு கூட்டம் முடிவுற்றது.

உறுப்பினர் பொதுக் கூட்டங்கள்—சமாஜ நிருவாக சபைக் கூட்டங்கள் :—21-6 53, 7-8-53-ல் கூடின.

### சமாஜ விதியில் திருத்தங்கள்

1. சமாஜத்தின் விதிகளில் சொல்லப்படும் சென்னை நகர எல்லையாவது சென்னை நகராண்மைக் கழக எல்லையாக மட்டும் இல்லாமல் தெற்கே தாம்பரம், மேற்கே திருவள்ளூர் வடக்கே பொன்னேரி வரையிலும் வியாபிக்கும்.

2. பத்திராசிரியரே பதிப்பாசிரியராகவும் இருந்து சட்டப்படி அரசாங்க அதிகாரிகளின் முன்னர் உறுதி மொழி கூறி......ஒழுங்காகப் பத்திரிகையை நடத்தி வர வேண்டும் என்பதற்குப்பதில் பத்திராசிரியர் ஒருவராகவும் வெளியிடுவோர் வேறொருவராகவும் இருக்கலாம் ; ஆனால் வெளியிடுவோர் (Publisher) சென்னை வாசியாக இருக்க வேண்டும் என்பது.

### நிறைவேறிய தீர்மானங்கள் :

1. கீழ்க் கண்டவர்கள் நிருவாக சபை அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திரு. வே. தியாகராய முதலியார் இராயப்பேட்டை
,, மு. நாராயணசாமி முதலியார் ,,
,, ச. நடேச முதலியார், தாம்பரம்
,, பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், M. A., தாம்பரம்

2. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, B. A., L. T. அவர்கள் சித்தாந்தத்தின் பதிப்பாசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

Regd. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

மலர் 26 | விஜய ஐப்பசி 1953 அக்டோபர் | இதழ் 10

## மறைந்தாரோ அவர்?

மறைந்தாரோ அவர் என்றால் மறைந்திலர் என்று கூறும் தமிழ் உலகு. மறப்போமா அவரை என்றால் மறவோம் என்று கூறும் எம் உள்ளம். அத்தகையார் யார் என்று கேட்பீரேல் நாளது திங்கள் 17-ம் தேதி வியாழக்கிழமை இரவு பூதவுடலை விட்டு நீங்கி, புகழ் உடம்பில் இருந்து அருளுகிற சைவப்பெரியார், தமிழ் அறிஞர், திரு. வி. க. அவர்கள். இவ்வண்டத்தில் கோடிக்கணக்கில் உயிர்கள் பிறக்கின்றன. பின்னர் மறைகின்றன. அவைகளைப் பற்றி யார் நினைக்கின்றார்கள்? உயிர்களில் சிறந்த மக்கட் சமூகத்திலும் கோடிக்கணக்கில் பிறக்கிறார்கள். மறைகிறார்கள். அவர்களைப் பற்றியும் எவரும் கவலைப்படுவதில்லை. ஆனால் பலகோடி மக்களுக்கு ஒருவர் அரிய புகழோடு தோன்றுகின்றார். தமது அருந்தொண்டினால் அப்புகழை நிலைநிறுத்துகின்றார். அன்னார் மறைவினால் பொதுமக்கள் கவலையுறுகிறார்கள்; துயரப்படுகிறார்கள். இன்னமும் சிலநாள் இருக்கலாகாதோ என்று ஏங்குகிறார்கள். அப்படிப்பட்ட பெரியார்களை மறைந்தார்கள் என்று கூறமாட்டோம். அவர்கள் செய்து வைத்திருக்கும் தொண்டினை உளத்தில் கொண்டு அவர்களை எப்பொழுதும் மறவாதிருப்போம். அவர்கள் செய்து வைத்துவிட்டுச் சென்றிருக்கும் செயல்களே அவர்களை நினைவுப்படுத்தும் சின்னங்களாக அழியாமல் நிலைபெற்றிருப்பன. அப்படிப்பட்ட பெரியார்களுள் சிறந்து விளங்குபவர் திரு. வி. க. ஆவார். தமிழ்நாடு இருக்குமட்டும், தமிழ்மொழி விளங்குமட்டும் அவ

ருடைய தோற்றம் தமிழ் அறிஞர்களுடைய நெஞ்சில் நிலையூன்றி, ஒளிசெய்துகொண்டிருக்கும். அவரது அரிய நூல்களை எடுத்துப் படிக்கும்போதெல்லாம் அவரது அமைதி நிலைத்தோற்றம், மனக்கண் முன்னே ஒரு திருவுருவமாகக் காட்சி அளித்துக்கொண்டேயிருக்கும். இதனை உண்மைத் தமிழ் மக்கள் எல்லாம் நன்றாய் அறிவார்கள்.

2. அப்பெரியார் செல்வத்திலோ, செல்வாக்கிலோ, அதிகாரத்திலோ, அதன் தோரணையிலோ மிகுந்த குடும்பத்தில் உதித்தவரல்லர். ஒரு சாதாரண நடுத்தரமான நாட்டுப்புறத்துக் குடியில் பிறந்தவர். பிற உயர்ந்த குடும்பத்தாரோ, அதிகாரிகளோ, சமயக்காப்பாளர்களோ, செல்வக்கு படைத்த பெருமக்களோ அவர்பால் உதவி செய்யவுமில்லை; அவர் அதனை விரும்பியதுமில்லை. இயற்கையாய்த் தமக்கிருந்த ஊக்கத்தினாலும், அறிவாலும், ஒழுக்கத்தினாலும், வள்ளன்மையாலும், தமிழ் உலகம் முழுவதும் அறிந்துபோற்றும் வண்ணம் ஒப்புயர்வற்ற மேன்மையில் திகழ்ந்தார். எப்படிப்பட்ட உயர்ந்த நிலையில் திகழ்ந்தபோதிலும் செருக்கற்ற அமைதியோடு தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராக விளங்கினார். எப்படிப்பட்ட நெருக்கடிக் காலம் வந்தபோதிலும் செல்வாக்குடையோர்பால் சென்று உதவியைக் கோருகிற எண்ணம் ஒருசிறிதும் இல்லாதவர். உயர்நிலை, தாழ்நிலை, இரண்டுமின்றி நடுநிலையில் இருப்பவர் ஒருவர் எத்தகைய அரியபெரும் காரியம் செய்யமுடியும் என்று ஐயப்படுவார்களுக்கு அன்னார்களும் செயற்கரிய செய்ய முடியும் என்று தமது வாழ்க்கையில் நிரூபித்துக் காட்டிய பெரியார் திரு. வி. க. அவர்களே. மொழி வளர்ச்சி, மொழிக்கு ஊழியம், மொழிக்கு மேன்மை என்ற கருத்துக்களை நெஞ்சில் பதித்துக்கொண்டு அல்லும் பகலும் அவர் பாடுபட்டார் என்றால், பிற தொண்டுகளாகிய அரசியல் வாதம், தொழிற் கட்சி முதலியவைகளை மறந்தார் என்று கூறவேண்டாம். ஏழைநிலையில் அகப்பட்டுக்கொண்டு பிறரிடம் ஊழியம் செய்வதே வயிறு வளர்ப்பதற்கு வசதியாக் கொண்ட பாட்டாளி மக்களுக்கு அவர் உற்ற துணையாக இருந்து வேண்டியவற்றைத் தமது உழைப்பினால் தருவித்துக் கொடுத்து அம்மக்களும் [illegible]ளே என்று நிரூபித்தவர் அப்பெரியார் அன்[illegible] சிறப்புப் பண்பு

186895



களுக்காக அப்பெரியார் அழியாப் புகழில் அன்றும் இருந்தார். இன்றும் இருக்கின்றார். என்றும் இருப்பார்.

3. செந்தமிழ் நாட்டில் சைவ சமய பீடமாக விளங்கி வரும் திருவாரூரை அறியாதார் எவருமிருக்கமாட்டார்கள். பண்டை வேளாளர் குலத்தில் ஒரு சைவக் குடும்பம் அவ்வூரில் இருந்தது. அக்குடும்பத்தில் ஒரு பெரியார் ஒரு காலத்தில் வடக்கே தொண்டை நாட்டுக்குச் சென்றார். அங்கே செங்கல்பட்டு வட்டத்தில் செம்பரம்பாக்கம் என்ற பேரேரியின் அருகில் துள்ளம் என்ற ஓர் சிற்றூரின்கண் அமர்ந்தார். அங்கே வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கையில், அக்குடியில் தோன்றிய திரு. விருத்தாசல முதலியார் சென்னைக்குச் சென்று இராயப்பேட்டையில் அரிசிக்கடை வைத்துப் பிழைத்து வந்தார். விருத்தாசல முதலியாருக்கு, திரு. வி. உலகநாத முதலியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் என்ற இரண்டுமக்கள் உதித்தார்கள். கலியாண சுந்தர முதலியார் திரு. வி. க. என்ற சுருக்கெழுத்தாலே எங்கும் அறியப்படுவர். அவர் பிறந்த இடம் துள்ளம் ஆகும். உலகநாத முதலியார் இராஜம்மையை மணந்து இரண்டு பெண்மக்களைப்பெற்று, சிறந்த கல்வி கற்று, சாது அச்சுக்கூடத்தை நடத்தி, தமது 62-வது வயதாகிய 1945 ஆண்டில் மறைந்தார். திரு.வி. க. அவர்களோ 26-8-1883-ல் தோன்றி, வெஸ்லிமிஷன் கல்லூரியில் கல்வி கற்று, யாழ்ப்பாணத்துச் சிந்தாந்த ஆசிரியர் கதிரைவேற்பிள்ளையவர்களிடம் சமய நூல்கள் கற்று, மயிலைத் தணிகாசல முதலியாரிடம் செந்தமிழைப் பயின்று தமிழ் ஆசிரியர் ஆக அமர்ந்தார். சிறிது காலம் ஸ்பென்ஸர் கம்பெனியில் எழுத்தாளராக இருந்தார். நாட்டில் தேசீய இயக்கம் தோன்றினதும் எழுத்தாளர் தொழிலைவிட்டு, தாம் கற்ற வெஸ்லியன்மிஷன் கல்லூரியிலேயே ஆசிரியராக அமர்ந்தார். பிறகு ஓர் அச்சகம் ஏற்படுத்திக்கொண்டு, 'தேசபக்தன்' என்னும் ஒரு செய்தித்தாளுக்கு ஆசிரியரானார். அதன் பின்னர் "நவசக்தி" என்ற மற்றொரு தாளைத் தொடங்கி அதன்மூலம் தேசீயக் கொள்கைகளை நாடெங்கும் பரப்பினார். அதற்காகச் சாது அச்சகம் என்ற ஓர் அச்சகத்தைத் தொடங்கி, அதற்குத் தலைவராகத் தம் தமயனார் அமைய, தாம் அதன்மூலம் நூல்களை இயற்றி வெளி

யிட்டார். அவர் இயற்றிய நூல்கள் அளவிறந்தன. அவைகளில் அடங்கிய தலைப்புகள் 'தேசீயம்', 'அரசியல்', 'சீர்திருத்தம்', 'தொழில் இயக்கம்', 'சமய இயக்கம்' 'சமரசப் பண்பு', 'கருத்து உயர்வு' முதலிய பலதிறப்பட்டன. பழைய நூல்களுக்கு உரை, புதிய உரை நூல்கள், அரிய கவிதைகள் இவைகளில் கணக்கற்றவைகளை எழுதியிருக்கின்றார். எழுத்தாளரே அன்றி, சிறந்த பேச்சாளரும் ஆவர். அஞ்சா நெஞ்சத்துடன் தாம்கொண்ட கொள்கைகளை வெளியிடுவார். இவ்வாறு வெளியிடுவதில் அரசியல் கொள்கைகளுக்கு மாறுபட்ட போதிலும் கூசாமல் வற்புறுத்துவார். இந்த வகையில் அவருக்குக் கணக்கற்ற பேர் நண்பர்கள் ஆனார்கள். நெருங்கிப் பழகிய நண்பர்களைப்பற்றி எல்லாம், தமது பெருநூலாகிய வாழ்க்கைக் குறிப்புகளிலே எழுதி இருக்கின்றார். 1912-ல் திருமதி கமலாம்பிகையை மணந்து இல்லற வாழ்க்கையை நடத்தினார். அந்த அம்மையார், இரண்டு குழவிகளை ஈன்றெடுத்து 1918-ல் மறைந்தார். இரு குழந்தைகளும் மறைந்தன. மறுமணம் நடத்திக்கொள்ள அவர் இசையவில்லை. தம் தமயனாரின் குடும்பத்திலேயே இருந்துகொண்டு வாழ்க்கையைத் தூய்மையான துறவொழுக்கத்திலேயே இறுதி நாள்வரைப் பெருமையுடன் கழித்தார்.

4. திரு. வி. க. வின் நற்பணிகள் உலக மக்களுக்குச் சிறப்பாகத் தமிழ் நாட்டார்களுக்குப் பலவகைகளில் பலன் அளித்தபோதிலும், தமிழுக்கும் சைவத்திற்கும் அவர் செய்திருக்கும் பேருதவி அளவிடற் பாலதன்று. அவ்விரண்டு வகையிலும் அவருடைய அரும் பெரும் பணிகள் நமது சைவ சித்தாந்த சமாஜ நோக்கத்தைப் பின்பற்றி யுள்ளது. தமிழிலே 'உரைநடை' என்ற பகுதிக்கு அவர் தந்தையாக விளங்குகிறார். மிகப் படித்தவர்களே யன்றி, பாமர மக்களும் எளிதில் அறிந்துகொள்ளக் கூடிய வகையில் அவருடைய உரை நடையில் இலக்கணப் பிழை என்பது ஒன்றுகூட இல்லை. ஆனாலும் மிகத் தெளிவாக இருக்கும். கூடியமட்டிலும் தூய்மையான தனித் தமிழிலேயே எழுதுவார். வெகு நீண்ட வாக்கியங்களை எடுத்து ஆள மாட்டார். சிறிய வாக்கியங்களைக் கொண்டது அவர் உரை நடை. அப்படிப்பட்ட பண்பாடுதான் அவருடைய



நடைக்கு அழகு எனலாம். தற்காலத்தில் முளைத்திருக்கும்
சில எழுத்தாளர்கள் "கருத்தை வெளிப்படுத்தினால் போது
மானது. இலக்கணத்தைப் பற்றிக் கவலையில்லை" என்
பார்கள். அப்படிப்பட்ட எண்ணப் போக்கு அவரிடமில்லை.
மேலும் எப்படிப்பட்ட பொருளைப் பற்றி எழுதினாலும்
அப்பொருளுக்குப் பொருத்தமானவற்றை மட்டும் எழுது
வார். தம் கருத்தை வற்புறுத்த வேண்டி அதனைப் பல
வகைகளிலும் பாகுபடுத்தி ஒவ்வொன்றுக்கும் தனித் தனி
அளவுகள் தந்து, கோவைப்படுத்தி ஒரு சித்திரமாக
வரைந்து எழுதுவார். ஆகவே படித்தவர்கள் அவருடைய
உரை நடையை மிகவும் போற்றுவார்கள். சிறப்பாக
மாணவர் கட்டுரைகளுக்கு அவருடைய உரைநடையை
எடுத்துக்காட்டாக அமைத்துக் கொள்ளுவார்கள். அவரு
டைய நாயன்மார் வரலாறு உரைநடைக்கு ஒரு சிறந்த நூல்
என்று போற்றவேண்டும்.

5. இனி உரைநடை போலவே அவருடைய கவிதை
களும் மிகத் தெளிவாக இருக்கும். அவருடைய கவிதைகள்
உள்ளத்து உணர்ச்சியை எழுப்புவன. ஆராய்ந்து எடுத்த
எளிய சொற்களாலே ஆக்கப்பட்டன. கருத்தை வழுவா
மலே கூறுவன. 'பொதுமை வேட்டல்' என்ற நூலில்
நெஞ்சினின்று எழுந்த உணர்ச்சி ததும்பிய எண்ணங்கள்
மலர்ந்து கிடக்கும். பெரும்பாலும் காய்ச்சீரால் அமைந்த
விருத்தங்களாகப் பாடப்பட்டிருப்பதில் எவ்வித அருமைக்
கருத்தும் எளிதில் அமரச்செய்யும். அவருடைய கவிதை
கள் எல்லாம் பெரும்பாலும் முதிர்ந்த காலத்தில் வெளி
வந்தன. ஆகவே அவைகள் நிரம்பிய முதிர்ச்சி கொண்
டவைகள். பின்காலத்தில் இரண்டு அரிய நூல்களை
இயற்றியிருக்கின்றார். அவைகள் சமரச நோக்கத்தைத்
தழுவினவை. கிறிஸ்துவின் போதனைகளைக் குறட்பாவில்
வைத்து வெளியிட்டிருக்கின்றார். அந்நூல் சிறந்த கருத்
துக்களைக் கொண்டுள்ளது. மற்றொன்று சமண சமயக்
கோட்பாடுகளை உரைப்பது. அது அகவற்பாவில் புனையப்
பட்டுள்ளது. சங்ககால நூலோ என்று மயங்கும் வண்
ணம் நடையை அமைத்திருக்கின்றார். தாம் எடுத்துக்
கொண்ட கருத்துக்களைத் தெளிவு படுத்தி உரைப்பது அவ
ருடைய நடையின் சிறப்பு. அவருடைய கருத்துக்கள்

இயற்கைக்கு மாறாகவோ, பகுத்தறிவுக்குப் பகையாகவோ இருக்கமாட்டா. புராணக் கூற்றுக்களையும் தகுந்தபடி விளக்கி எவரும் ஏற்றுக்கொள்ளும் முறையில் பொருள் உரைப்பார். இந்த வகையில் உரை நடைக்கும், செய்யுள் நடைக்கும் திரு. வி. க. அவர்கள் செய்திருக்கும் நற்பணி அளவிடத் தக்கதன்று.

6. இனி சமயப்பணியில் அவர் செய்திருக்கும் சேவை தான் நமது சமாஜத்திற்கு ஏற்ற முறையில் இணங்கியிருக்கின்றது. சமாஜ நோக்கங்களுக்கெல்லாம் மிக உறுதியான ஆதரவு அவருடைய பதிப்புக்கள் தந்தன. பெரியபுராணத்திற்கு ஓர் உயர்ந்த பதிப்பும், தெளிவான குறிப்புரைகளும், விளக்க உரைகளும் அவர் தந்திருக்கின்றார். அவர் வெளியிட்டிருக்கும் நாயன்மார் வரலாறு சைவ உலகத்திற்கு மிகுந்த ஊக்கம் தந்திருக்கின்றது. தமது வாழ்க்கை நூல், முருகன் அல்லது அழகு, இமயமலை அல்லது தியானம், பொதுமை வேட்டல், பெண்ணின் பெருமை முதலிய நூல்களில் சைவசமயத்தின் பெருமைகளையும், உட்கிடக்கைகளையும் ஆங்காங்கே பொதிந்து வைத்திருக்கின்றார். சைவ சமயத்தைப் பெருமைப் படுத்திப் பேசுங்கால் ஏனைய சமயங்களைக் குறைவுபடுத்திப் பேசார். இப்பண்பு அவரது சமரச நோக்கத்தினால் விளைந்தது ஆகும். சமாஜத்திற்கு நேரடியாக அவர் உழைத்திருப்பதை மறக்கவே கூடாது. சமாஜம் அடக்கவிலைப் பதிப்புக்களை வெளியிட்டுச் சைவக்கொள்கைகளைப் பரப்பினபோது தமது அச்சகத்தின் மூலம் நிரம்ப உதவி செய்திருக்கின்றார். பல்லாயிரக் கணக்கில் சைவத் திருமுறைகள், சைவ சாத்திரங்கள் முதலியவைகளைச் சமாஜம் வெளியிட்டபோது வெகு நல்ல முறையில் குறைந்த செலவில் எவரும் மெச்சிப் படிக்கும் வகையில் அப்பதிப்புக்களை வெளியிட்டு உதவினார். மற்றும் சமாஜத் திங்கள் வெளியீடான சித்தாந்தம் என்ற இந்த வெளியீட்டைத் தொடங்கினது முதல்கொண்டு நாளதுவரை அவருடைய கண்பார்வையிலேயே நடந்துவந்திருக்கின்றது. இது மட்டுமன்று: சமாஜ ஆண்டுக்கூட்டம் இரண்டிற்கும், திங்கட் கூட்டம் சிலவற்றிற்கும் தலைமை வகித்தும், பேச்சுக்கள் நிகழ்த்தியுமிருக்கின்றார். கணக்கற்ற சைவக் கூட்டங்களில் பேசியும், சமாஜ செயற்குழுக்களில் பங்கெடுத்துக் கொண்டும் செயல் ஆற்றியிருக்கின்றார்.



7. திரு. வி. க. அவர்கள் முதல் தடவையாகத் தலைமை வகித்தது திருவதிகையிலே. அது 29-வது ஆண்டு விழா. 1934வது ஆண்டு டிசம்பர் திங்கள் 23, 24, 25 தேதிகளில் நடைபெற்றது. முதல் நாள் காலையில் திருவீரட்டானத்தில் வழிபாடு நடந்த பிறகு ஸ்ரீமத் ஞானியார் அடிகள் சித்தாந்த சாத்திரப் பதிப்பை வெளியிட்டார்கள். பிறகு அடிகளே மாநாடு திறப்புவிழா நடத்தினார்கள். திரு. வி. க. அவர்கள் தலைமை வகித்து சித்தாந்தத்தின் தத்துவத்தைப் பற்றிப் புதுமுறையில் ஆராய்ச்சி உரை நிகழ்த்தினார்கள். அதுமுதல் மூன்று நாட்கள் அவரது தலைமையில் வெகு சிறப்பாக மாநாடு நடைபெற்றது. பிறகு இரண்டாம் முறையாக மதுரைக் கோயில் கலியாண மண்டபத்தில் 38வது ஆண்டுவிழா நடைபெற்றது. 1943ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27, 28, 29, தேதிகளில் அவரது தலைமையில் சைவ மாநாடு வெகு அருமையாக நடந்தது. காலை 6 மணிக்கு ஆலய வழிபாடு நடந்ததும், திருஞான சம்பந்தர் மடாலயத்திலிருந்து தலைவர் முதலியோர் ஊர்வலமாக நான்கு தேர்வீதிகளிலும் அழைத்துச் செல்லப் பட்டார்கள். அக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. மகாநாடும் மிகப் பெரிதாக நடைபெற்றது. ஈழநாட்டிலிருந்து மட்டும் 50 பேர் வந்திருந்தார்கள். இளைஞர் மாநாடு, மாதர் மாநாடு, உணவு மாநாடு, தமிழ்ச்சங்க மாநாடு, சேரித்தொண்டு, முதலிய பல திருக்கூட்டங்கள் நடைபெற்றன. கோயில் அறக்காப்பாளர்களும் பங்கெடுத்துக் கொண்டார்கள். மடத்தார்களின் கூட்டுறவு சிறப்பாக இருந்தது. மேலே சொல்லிய சைவ மாநாடுகளே அன்றி, பற்பல திருக்கூட்டங்களிலும் திரு. வி. க. தலைமை வகித்தும், பேசியும் இருக்கின்றார். அவ்வாறு செல்லும் இடங்களில் எல்லாம் கணக்கற்ற மாணவர்களும், இளைஞர்களும், அவரைச் சூழ்ந்துகொண்டு அவர் வாயினின்று வரும் நல்லுரைகளைப் பருகிக்கொண்டே இருப்பார்கள். அவர் செல்லும் காலங்களில் எல்லாம் அருகில் இருந்த இயற்கை அழகு பொருந்திய இடங்களுக்குச் சென்று அழகுகளைத் துய்த்தும், மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டியும், தாமும் மகிழ்வார்கள். திருவெண்ணெய் நல்லூருக்குப் போகும்போதெல்லாம் மண்டைக்

குளத்திற்குச் சென்று அரிய ஊற்றில் நீராடிவிட்டு மிக உற்சாகத்தோடு திரும்புவார். திருப்போரூர், திருவிட வெந்தை, முதலிய கடற்கரைத் தலங்களுக்குச் சென்ற போதெல்லாம் மலைமீதும் மணற் குளத்திலும் முறையே சென்று தியானம் செய்தும், நீராடியுமே திரும்புவார். அவருடைய பேச்சின் வளமை எப்படிப்பட்டவர்களையும் - சிறப்பாக இளைஞர்களை—கவர்ந்து செல்லும். தமிழ் நாட்டிலேயே ஓர் ஒப்பற்ற பேச்சாளராக அவர் விளங்கினார்.

8. திரு. வி. க. அவர்களின் மணிவிழா 25-8-53-ல் நடைபெற்றது. அதைப் போன்ற சிறப்பு வாய்ந்த விழா தமிழ் நாட்டில் வேறெந்த பெரியாருக்கும் நடந்திருக்காது. விழா நிகழ்ச்சிகள் 23-8-43-ல் தொடங்கி 30-8-43-ல் முடிவு பெற்றது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பெரியார் தலைமை தாங்கினார். சென்னை நகரிலும் பிற இடங்களிலும் வெகு நன்றாகப்பாராட்டுக் கூட்டங்கள் நடைபெற்றன. சென்னையி லிருந்த செய்தித்தாள்களும் திங்கள் வெளியீடுகளும் திரு. வி. க. அவர்களைப் பற்றி வாழ்க்கைக் கட்டுரைகளை வெளியிட்டன. கணக்கற்ற நண்பர்களும், அறிஞர்களும் பாராட்டு உரைகளையும், பாக்களையும் வழங்கினார்கள். 23—8—43-ல் சமாஜப் பாராட்டு நடைபெற்றது. பிறகு தொழிலாளர், மங்கையர், செய்தித்தாளாளர், மாணவர், ஆசிரியர், கிறிஸ்தவர் முதலிய பலதிறப்பட்டார்களும் பல இடங்களில் பாராட்டினார்கள். 30—8—43-ல் சென்னை நகராட்சிக் கழகம் ஒரு பாராட்டு மடலை அளித்தது. இவ்விதச் சிறப்பு தமிழ் அறிஞர்களுக்குக் கிடைப்பது அரிது. 29—8—43ல் திரு. வி. க. மடல் என்ற ஒரு அரிய நூல் வெளியிடப்பட்டது. இந்த வகையில் திரு. வி. க. அவர்களின் மணிவிழாக் கூட்டம் தமிழ்நாடெங்கும் வழங்கிற்று.

9. திரு. வி. க. அவர்கள் மணிவிழா நடந்த பிறகு 10 ஆண்டுகள் வரை தமிழுக்கும், சமயத்திற்கும், நாட்டிற்கும், உழைத்து வந்திருக்கின்றார். இறுதிக்காலம் வரை ஒரு விநாடியும்கூட வெறுமனே இருக்கவில்லை. எப்பொழுதும் ஆக்க வேலைகளிலேயே ஈடுபட்டிருந்தார். சில தமிழ்ப் பெரியார்கள் ஆக்கவேலை சிறிதுமின்றி அழிவு வேலையிலேயே பெருமையும் புகழும் ஈட்டி வருவதைப்போல் அல்லாமல், திரு. வி. க. அவர்கள் கடினமான உழைப்பையே



குறிக்கோளாகக் கொண்டு நாட்டு மக்களுக்கு உழைத்
தார். 50 ஆண்டுகளாகத் தன்னலமற்ற பொது வாழ்க்கை
யின் கடினமான உழைப்பால் அவருடைய மெல்லிய
உடல் பலவீனமடைந்து கண்ணொளியும் மங்கிற்று.
அப்படியிருந்தும் சாது அச்சுக்கூடப் பொறுப்பாளர் •
திரு. மு. நாராயணசாமி அவர்களின் உதவியைக் கொண்டு
கவிதைகள் எழுதிக்கொண்டே யிருந்தார். இறுதியாக
3 மாத காலமாகப் படுத்த படுக்கையில் இருந்தபோது நாட்
டுப்பெரியார் பலரும் அவரது உடல் நலத்தை விசாரிக்கும்
வண்ணமாக இருந்தார்கள். நினைவு இழந்த நாள்வரைக்
கும் உள்ளந் தளராதவராகவே யிருந்தார். 50 ஆண்டுக
ளாக மக்கட்கு உழைத்துவந்த தமிழகத்தின் தவப்பெரியார்
திரு. வி. க. பொருட்டு நாட்டுப் பெரியார்கள் கூட்டம் கூடி
அவர் நினைவார்த்தமாக, சென்னை, இராயப்பேட்டை
ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் திறந்த வெளியில்
ஒரு மண்டபம் எழுப்பத் தீர்மானித்தார்கள். அது நடந்த
ஒரு வாரத்திற்குள்ளாக பெரியாருடைய ஆன்மா சாந்த
நிலையில் இறைவன் திருவடி அடைந்தது.

பெரியாருடைய பிரிவை அறிந்ததும் தமிழ் உலகம்
முழுவதும் பெருந்துயரத்தில் ஆழ்ந்தது. பல்லாயிரக் கணக்
கில் மக்கள் அவருக்கு இறுதி மரியாதை செய்யவந்தார்கள்.
எல்லா வகைப்பட்ட சமயத்தார்களும் அரசியல் வாதிகளும்
அவருக்கு அஞ்சலி செய்யவந்தார்கள். அவருடைய பரு
உடலின் இறுதியாத்திரை ஒரு காதம் நீளம் இருந்தது.
இதைப்போலப் பெருமக்கள் பொருட்டு நடந்த வணக்கம்
வேறு எந்தப் பெரியாருக்கும் நடந்திராது. நாட்டில் கணக்
கற்ற இடங்களில் அனுதாபக் கூட்டங்கள் கூட்டினார்கள்.
எல்லாச் செய்தித்தாள்களும் பெரியாருடைய வாழ்க்கைக்
குறிப்புகளையும், அனுதாபச் செய்திகளையும் வெளியிட்டன.
எல்லாரைக் காட்டிலும் தமிழ் உலகம் மிகுந்த துயரத்தில்
ஆழ்ந்து கிடக்கின்றது. சைவ சித்தாந்த சமாஜம் தந்தையை
இழந்த குழந்தைபோலத் தவிக்கின்றது.

பெரியாருடைய ஆன்மா சாந்த நிலையில் திருப்போரூ
ரான் திருவடியில் திகழுவதாகுக! அவருடைய நினைவு
சமாஜத்தினருடைய நெஞ்சில் நிலைபெற்றுச் செயல்முறை
யில் ஊக்குவதாகுக!

# தமிழ் முனிவர் திரு. வி. க. சரிதச் சுருக்கம்

[ச. சச்சிதானந்தம் பிள்ளை]

திரு. வி. கலியாணசுந்தர முதலியாரைத் தமிழகம் திரு. வி. க. என்று அன்புரிமையுடன் அழைத்து வந்துள்ளது. இவர், பாரத நாட்டை - சிறப்புவகையில் தமிழகத்தை - அடிமைத்தளையினின்று விடுவித்து உயர்த்த அவதரித்து இந்நூற்றாண்டில், பல துறைகளில், அரும்பெருந் தொண்டாற்றிய மாபெருந் தலைவர் சிலருள் ஒருவர். இவரைத் தமிழ்ப்பெரியார், தமிழ்த்தந்தை, தமிழ்முனிவர், பெண்ணின் பெருமை நாடிய பெருந்தகை, தொழிலாளர் தோழர், சமரச ஞானி என்றெல்லாம் தமிழ்நாடு போற்றிவருகின்றது. இப்பெரியார் தமது 71-ம் ஆண்டுத் தொடக்கத்தில் ஒளிசேர் மேலுலகடைந்துவிட்டமை குறித்துத் தமிழக முழுவதும் தனது வருத்தத்தையும், அவர்பால் தான் கொண்டுள்ள உயர்மதிப்பையும், பலவழிகளிலும் தெரிவித்து வருகின்றது. திரு. வி. க. வின் வரலாற்றில், அவர் மணிவிழாக் காலம் (1943 ம் ஆண்டு) வரையில் நிகழ்ந்தனவெல்லாம், அவரே உலகிற்களித்த "திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்" என்னும் உயர்தர சுயசரிதை நூலில் விரிவாகக் காணவுள்ளன. அப்பெரியார் நினைவு மலராக வரும் இவ் வெளியீட்டில், பயன் செறிந்த அவர் வாழ்க்கையின் சில முக்கியக் குறிப்புகள் மட்டும் தரப்படுகின்றன.

திரு. வி. க. வின் தந்தையார் திரு. வே. விருத்தாசல முதலியார். சீலமிக்க இச்சைவப் பெரியாரின் முன்னோர்கள் திருவாரூரினர். இவரது மனைவியார் கற்பின் மேம்படு சிறப்பினராகிய சின்னம்மாள்.

இவர், சென்னை இராயப்பேட்டையில் குடியேறியிருந்தார். அதுகாலை செம்பரம்பாக்கத்து ஏரியைச் செப்பஞ் செய்யும் ஒப்பந்தப் பொறுப்பைப் பெற்றவர்களுள் ஒருவராய், செங்கற்பட்டு ஜில்லா சைதாப்பேட்டை தாலூகாவிலுள்ள துள்ளம் என்னும் சிற்றூருக்குக் குடும்பத்துடன் சென்று தங்கினார். இது, பாடல்பெற்ற சிவதலமாகிய திருவேற்காட்டிற் கருகிலுள்ளது. இவ்வூரில் நமது அருமைத் திரு.வி.க. 26—8—1883ல் தம்பெற்றோர்க்கு ஆறாவது



மகவாக அவதரித்தார். இதற்குச் சுமார் இரண்டாண்டுகட்கு முன்பு இவர் அருமைத் தமையனார் திரு. வி. உலகநாத முதலியார் பிறந்தார். ஏரியைச் சீர் செய்யும் பணி முடிந்த பின்பும், விருத்தாசலமுதலியார் சிலஆண்டுகாலம் துள்ளம் கிராமத்திலேயே வசித்துக்கொண்டு வாணிபமும் விவசாயமும் நடத்திவந்தார். தமது மைந்தர்கட்குத் தாமே முதலாசிரியராகவு மிருந்தார். இவ்வாறு திரு. வி. க. முதலேழு ஆண்டுகள் கிராமவாசியா யிருந்தார்.

பிள்ளைகளின் மேற்படிப்பைக் கருதி, விருத்தாசல முதலியார் 1890-ல் சென்னை இராயப்பேட்டைக்கே திரும்பி வந்து தங்கினார். அதுமுதல் திரு. வி. க. வின் இளமையும் வாலிபமும், சென்னை இராயப்பேட்டையில் கழிந்தன. கல்வி கற்றது இராயப்பேட்டை ஆரியன் பிரைமெரி பாடசாலையிலும், வெஸ்லி கல்லூரியிலும். வெஸ்லி கல்லூரியில் ஆறாவது பாரம் வரையில் (1898—1904) மாணவராயிருந்தார். ஒவ்வொரு வகுப்பிலும் தலைமாணுக்கராய் விளங்கி, ஆண்டுதோறும் பரிசுகள் பெற்றுச் சிறந்தார். இங்ஙனம் பயின்று வருங்கால் தலைமையாசிரியராக இருந்தவர் உயர்-திரு. எஸ். வாசுதேவாசாரியராவர். இவரது உயரிய ஒழுக்கமும், கடமையுணர்ச்சியும், வினைத்திறனும், தெய்வபக்தியும், இவர்பாற் கற்ற மாணவர் பலரது வாழ்க்கைக்குச் சீரிய குறிக்கோளைத் தர உதவின. இங்ஙனம் பயன் பெற்றார் பலர். இத்தகைய நல்வாய்ப்பைப் பெற்ற திரு. வி. க. அப்பள்ளிப் பாடங்களி லொன்றாக விவிலிய நூலையும் படித்தார். ஞாயிற்றுக் கிழமைகளில் நடக்கும் விவிலிய நூற்போதனையும் கேட்டார். அந்நாட்களில், அப் பள்ளியில் விவிலிய நூலைக் கற்பிக்கும் கிறித்துவ ஆசிரியர்கள் இந்துமதத்தை அவ்வப்போது தாக்கிப் பேசுவதுண்டு. அப்பொழுது நம் திரு.வி. க. எதிருரையாடுவார்.

இந்நிலையில், யாழ்ப்பாணத்து மேலைப்புலோலியிலிருந்து சென்னை சேர்ந்த நா. கதிரைவேற் பிள்ளை என்னும் புலவர் ஒருவர், அதே வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரியராக வந்தமர்ந்தார். விரைவில் திரு. வி.க.வுக்கும் இப்புலவர்க்கும் பழக்கமேற்பட்டது. தமிழ்ப் பெரும்புலமையோடு அழுத்தமான சைவப்பற்றும் உடையவர் கதிரைவேலர். இவர் கூட்டுறவால் திரு. வி. க. வுக்கும் தமிழ்ப்பற்றும் சிவப்பற்

றும் முறுகி வளரலாயின. ஆங்கிலப் படிப்பிலிருந்த ஆர்வம் குன்றிற்று. இதற்குள் 'அருட்பா—மருட்பா' என்னும் சமயச்சண்டை ஒன்று சைவ உலகில் தோன்றிற்று. வேதாந்த சித்தாந்தப் போரும் நிகழ்ந்தது. கண்டனக் கூட்டங்கள் பல நடந்தன. இவற்றிலெல்லாம் திரு. வி. க. கதிரைவேலரின் முதன் மாணவராய் நின்று கலந்துகொண்டார். ஆசிரியர்மீது தொடுக்கப்பட்டதொரு வழக்கில் இவர் ஒரு சாக்ஷியாகச் செல்லும் கடமை ஏற்பட்டது. இதனால் இவர் 6-ம் பாரத் தேர்வுப் பரீக்ஷைகளில் சிலவற்றை எழுத முடியவில்லை. ஆகையால் இவர் மெற்றிகுலேஷன் பரீக்ஷைக்குப் போகத் தடையேற்பட்டுவிட்டது. அதே வகுப்பில் மீண்டும் படிக்க மனமின்றிப் பள்ளியை விட்டு நீங்கினார். சிலமாதங்களில் அவர் தந்தையாரும் விண்ணுலகடைந்துவிட்டார். ஆயினும், திரு. வி. க. வின் தமிழார்வமும் சைவப் பற்றும் குன்றாது, மேன்மேலோங்கின. யாழ்ப்பாணத்துப் புலவர் பெருமானிடம் பல நூல்களைப் பாடங் கேட்டார். பின்பு சித்தாந்த சாத்திரங்களை மயிலை மகாவித்வான் தணிகாசல முதலியார் என்னும் சைவப் பெரியாரிடம் கற்றுத் தெளிந்தார். சிறந்த புலவரும் சைவருமாய்த் திகழ்ந்தார். திருவல்லிக்கேணியில் பெரியபுராணத்தை அரிய முறையில் பன்னாள் பிரசங்கித்தார்.

திரு. வி. க. மாணவராயிருந்த காலத்தில் (1902) இராயப்பேட்டையில் இளைஞர் கல்விக் கழகம் என்றொரு சபையைத் தோற்றுவித்தார். தம்மையொத்த இளைஞர்கள் அதிற் சேர்ந்து ஆர்வத்துடன் படிக்கவும் திறமையுடன் பேசவும் பழகினர். அக்கழகமே 1903-ல் **பாலசுப்பிரமணிய பக்தஜன சபை** என்னும் சபையாக மாறியது; திரு. வி. க. வின் ஆசிரியர் ஸ்ரீலஸ்ரீ கா. கதிரைவேற் பிள்ளையவர்களைக் கொண்டு நிறுவப்பெற்றது.

குடும்பத் தொல்லைகளைக் குறைக்க விரும்பிச் சிறிது காலம், சென்னை "ஸ்பென்சர்" கம்பெனி என்னும் பெரிய ஆங்கில வாணிபச் சாலையில் திரு. வி. க. எழுத்தாளராய்ப் பணிபுரிந்தார். அந்நாளில் கெயர் ஹார்டி என்னும் ஆங்கிலத் தொழிற்கட்சித் தலைவர் சென்னைக்கு வந்தார். அவர் தொண்டைப்பற்றித் திரு. வி. க. அறிந்து புத்துணர்ச்சி பெற்றார். அது முதல் ஏழைத் தொழிலாளர் நலங்



குறித்துப் பாடுபடவேண்டும் என்னும் உணர்வு இவர்பால் முறுகி வளர்ந்தது. தொழிலாளரோடு நெருங்கிப் பழகி அவர்களை ஒற்றுமைப் படுத்தலானார். அதனைக் கம்பெனி முதலாளிகள் விரும்பவில்லை. பின்பு, சென்னை ஆயிரம் விளக்கு வெஸ்லியன் மிஷன் பள்ளியில் ஆசிரியராய் அமர்ந்து, அனைவரும் மதிக்க அன்புப் பணி புரிந்தார். சின்னாளில் வெஸ்லிக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியர் பதவி கிடைத்தது; மாணவர்களும் மற்றவர்களும் மகிழச் சிறந்த ஆசிரியராய்த் திகழ்ந்தார்.

திரு. வி. க. விற்கு, 1912-ல் திருமணம் சிறப்பாக நடந்தது. அதில் இந்து உறவினர்களும் நண்பர்களுமேயன்றி, அவர்பால் அன்பும் பெருமதிப்பும் கொண்ட பல கிறிஸ்துவ அறிஞர்களும் வந்து கலந்துகொண்டு, மனமார வாழ்த்தியும், பரிசளித்தும், பிரார்த்தனை செய்தும் தம் அன்பைப் புலப்படுத்தினர். அவருக்கு வாழ்க்கைத் துணைநலமாய் வாய்த்த நங்கை சென்னை திருமதி. கமலாம்பாள் அம்மையார். உயர்குடிப் பிறந்த தமிழ் மகளிடத்துக் காணும் உத்தம குணங்கள் யாவும் இப்பெண்மணியின்பால் ஒருங்கு திகழ்ந்தன. இவர்தம் மாண்பைப் பற்றித் திரு. வி. க அவர்களே தம் வாழ்க்கைக் குறிப்பில் சிறப்பாக எழுதியுள்ளார். **பெண்ணின் பெருமை** என்னும் தனிப் பெரு நூல் பின்பு வெளியாவதற்கு இவர் அருமை மனைவியாரின் மாண்பே காரணம் என்று அறிகின்றோம். இவர்கள் மனமொத்த காதல்வாழ்வு ஓர் ஆண்மகவையும் ஒரு பெண் மகவையும் அளித்தது. ஆனால், இரண்டும் குழந்தைப் பருவத்திலேயே மறைந்துவிட்டன. அந்தோ! மகவை யளித்த மங்கையர்க்கரசியாரும் மணமாகிய ஆறாண்டுக்குள் அமருலகடைந்துவிட்டார். அதுமுதல் திரு. வி. க. "இந்த இப்பிறவிக் கிரு மாதரைச் சிந்தையாலும் தொடேன்" என்ற திண்ணிய விரதத்தை மேற்கொண்டு, வழுக்குதலின்றி, வாழ்ந்து வந்தார். அவர்பால் உண்மை வீரம் விளங்குதற்கு இஃதோர் தலையாய காரண மென்னலாம். "புலனைந்தும் வென்றான்றன் வீரமே வீரம்" என்ற ஔவை திருவாக்குக்குத் திரு. வி. க. ஓர் எடுத்துக்காட்டாக இலகுகின்றார்.

1917-ம் ஆண்டு அணுகியது. நாட்டில் அரசியற் கொந்தளிப்பு தொடங்கியது. அன்னிபெசண்டு அம்மை

சங்கம் சென்னையில் ஏற்பட்டது. மேன்மேலும் இயக்கம் வலுத்து இந்தியா முழுவதும் பரவியது. அதனால் பல்லாயிர மக்களின் வருவாயும் மதிப்பும் உயர்ந்தன. தன்னலம் சிறிது மின்றிப் பல்லாண்டுகளாய்ப் பாடுபட்டமைக்கு ஓரளவு நற்பயன் கிடைத்தமை இவருக்குத் தமது முதுமையில் மகிழ்ச்சி தந்தது. "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப் பதுவே அல்லாது வேறொன்று" விரும்பாத மேலோருள் இவரும் ஒருவரன்றோ!

சமய உலகில், திரு. வி. க. முதலில் அழுத்தமான சித் தாந்த சைவராய்த் தோன்றினார். நீதிபதி சதாசிவ ஐயர், ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், ஸ்ரீ பாம்பன் சுவாமிகள் என்னும் சான்றோர்கள் தொடர்பு வலுத்தது. மேல்நாட்டு நல்லறிஞர்கள் கருத்துக்கள் பலவற்றையும் அறிந்தார். பின்பு, 'வாதமும் சமயபேதமும் கடந்த' சமரச சைவ ராய்—எம்மதமும் சம்மதம் என்ற பரந்த நோக்குடைய ராய்—விளங்கினார். உண்மைச் சைவம் இந் நிலையில் இருப்பதே என்பதைத் தம் சைவத்தின் சமரசம் என்னும் நூலில் விளக்கியிருக்கின்றார். திருமால் அருள் வேட்டல், முருகன் அருள் வேட்டல், கிறிஸ்துவின் அருள் வேட்டல், புதுமை வேட்டல், பொதுமை வேட்டல், சிவனருள் வேட் டல் என்னுமிவர் செய்யுள் நூல்களில் இவரது முதிர்ந்த கருத்துக்களைச் சிறப்பாகக் காணலாம். சிவனருள் வேட்ட லிலும் உள்ளொளியிலும் புலனாகும் தத்துவங்கள் மிக வும் உயர்ந்தவை. கிறிஸ்துநாதர் மலைப்பொழிவும், அவர் அருளுரைகள் வேறு சிலவும் இவர் சமரசப் பார்வையில் பெரிதும் போற்றற்குரியனவாய்ப் புலப்படுகின்றன.

இப் பெரியார்க்கு 1943 ல் மணிவிழா நடந்தது. அது போன்ற விழா அதற்கு முன்போ பின்போ நடந்ததாகத் தெரியவில்லை. பலப்பல ஊர்களில், பல்லாயிர மக்கள், இவர்பாற் கொண்டுள்ள அன்பும் நன்மதிப்புமே காரண மாக, இவ்விழாவைக் கொண்டாடினர். சென்னை நகராண் மைக் கழகமும் பிறசில நகரசபைகளுங்கூட, இவ்விழா வைக் கொண்டாடின. எண்ணிறந்த வாழ்த்துரைகள் வழங்கப்பட்டன. இவருக்குப் பணமுடிப்புத் தரச் சில



செல்வர்கள் அன்பொடு விரும்பினர். இதற்கு மட்டும் இவர் இணங்கவில்லை.

அப்பால் இவர் அரசியலிலிருந்து ஒதுங்கி நின்றமை புலப்படுகிறது: தொழிலாளர் இயக்கத்திலும் பண்டு போல் தலைமைதாங்கி முனையவில்லை. யார்வரினும் அன் புடன் வரவேற்று, தமது ஆலோசனைகளைக் கூறுமளவில் நின்றார். ஒருமுறை மட்டும், தொழிலாளர் சமுதாயத் திற்கு மீண்டும் பெருங்கேடு வருவதாகத் தோன்றிய போது, சின்னாள் பண்டுபோல் வீறிட்டுப் பணியாற்ற முயன்றார்.

திரு. வி. க. தமது வாழ்க்கையின் கடைசி ஏழு ஆண்டு களில் செய்யுள் வடிவ நூல்கள் எட்டு இயற்றியுள்ளார். அவற்றுள் முதலாவது கிறிஸ்து மொழிக்குறள். சென்னைப் பஞ்சாலைத் தொழிலாளர் வேலைநிறுத்தம் நிகழ்ந்தபோது, அவர் வீட்டைவிட்டு வெளியேறலாகாது என்று அரசாங்க உத்தரவு ஒன்று பிறந்தது. அவ்வாறு ஒருமாதம் வீட்டுக் காப்பில் இருந்தபோது அந்நூல் யாக்கப்பட்டது. "ஏசு மொழியும் இனிய திருவாசகமும் நேச அருட்பாவும் என் நெஞ்சு" என்று அதனாசிரியர் முன்னுரை தொடங்குகிறது.

அவர் செய்த பல்வகைத் தொண்டுகளில் நூலியற்றும் தொண்டினைப் பகலில் செய்யமுடியவில்லை ; அவர் அதனை இரவில்தான் புரிய இயன்றது. இதனால், முதுமைப் பருவத் தில் உறக்கம் அவரை அணுகா தொழிந்தது. நாளடைவில் அது அவர் உடல் வளத்தைக் குறைத்தது; உள்ளுறுப்புகள் மெலிவுற்றன ; கண்களையும் படலம் மறைத்தது. இவ்வாறு உடன்மெலிவு புறக்கண் பார்வையை மறைத்ததெனினும், அது அவர் அகக்கண்ணை - உள்ளொளியை-மறைக்கவில்லை. "இந்நிலையில் சிந்தனாசக்தி பெருகுவதை யான் உணர லானேன்" என்கின்றார். இப்படிப் படுக்கையிலிருந்து கொண்டே தமது 67-ம் ஆண்டில் முதலில் அருளப்பட்ட நூல் இருளில் ஒளி என்பது. இதன் வாயிலாக மார்க்ஸிய உடலில் காந்தீய உயிர் கலக்க வேண்டும் என்றும், தேவைக்குமேல் பொருள் திரட்டாமையும் அகிம்சையும் பரமதர்மமென்றும், இதற்கு நெறி ஆத்மார்த்தம் என்னும் கடவுள் நெறி என்றும் அறிவுறுத்துகின்றார். பின்னர்,

இருமையும் ஒருமையும் என்னும் நூல் பாடப்பெற்றது. உலகம் பொல்லாததன்று, மனிதன் உளந்தான் பொல்லாதது என்றும்; ஒருமைக் கடவுள் உலகப்பன்மையில் கலந்திருப்பது புலனாயின், வேற்றுமையுணர்ச்சிகள் மாயும்; " மக்களெல்லாம் ஒக்கலாவர், மற்ற உயிர்களும் சுற்றமாகும் " என்றும் கூறுகின்றார்.

திரு. வி. க. வின் 68-ம் வயதில் தோன்றியது அருகன் அருகே என்னும் அரியநூல். மார்க்ஸியத்தின் அடிப்படையில் அகிம்சையும், ஆத்மார்த்தமும் இல்லாத குறையுளதென்றும், காந்திய - மார்க்ஸியத்திற்குத் தாயகம் விருஷபதேவர் போதித்த அகிம்சையும், மிகுபொருள் உவவாமையும் என்றும் காட்டுகின்றார்.

அடுத்த ஆண்டில் சித்தந் திருந்தல் என்னும் நூல் முதலில் வெளிவந்தது. உயிரின் விடுதலைக்குரிய வழிகளுள் சித்தம் திருந்தல் ஒன்றென்று அது விளக்குகின்றது. அதை அடுத்து, முதுமை உளறல் என்னும் அறிவுசால் அருநூலை நம் ஆன்மீகக் கவிஞர் உலகுக்களித்தார். இதில் சாதிமத உணர்ச்சி வெறிகளை வன்மையாய்க் கண்டிக்கின்றார். உலக ஒருமைக்காக உழைக்கவேண்டுமென்றும், " மனிதக் குறிக்கோள் புனித அகிம்சை, அகிம்சாதர்மம் அகிலம் ஆக. அகிம்சை வெல்க! அகிம்சை வெல்க!! " என்று முடிக்கின்றார்.

மூதறிஞர் திரு. வி. க. தமது மரணப் படுக்கையினின்றும் அருளிய இறுதிநூல், வளர்ச்சியும் வாழ்க்கையும் அல்லது படுக்கைப் பிதற்றல் என்பது. அவர் பருவுடல் நாளுக்கு நாள் மெலிவுற்று வந்தும், உணர்ச்சியின் எழுச்சி மட்டும் குன்றவில்லை. அந்நிலையில், வளர்ச்சித் தத்துவத்தை விளக்க இந்நூலைப் பாடியருளினார். அதன் முன்னுரையை அவர் எழுதுவித்தது 26—8—53ல்; அதாவது, தமது 70-ம் ஆண்டின் நிறைவு நாளில்!

இந்நூலில் 16 தலைப்புக்கள் உள. இறுதித் தலைப்பு அந்நூல் விளக்கும் தத்துவங்களைத் தொகுத்துக் கூறுவது. பதினைந்தாம் தலைப்பாக முறையீடு என்பதமைந்துள்ளது. அதன் இறுதிப் பத்து அடிகள் பின்வருமாறு:



" இறைவனை மறந்தால் உறுதலை ஓர்க
ஓர்ந்தே ஓர்ந்து சார்பு பெறுக
குறைகளை முறையிட் டிறைவனை நினைக்க;
குறைகளை அகம்புறம் முறையிடல் வீரம்
அந்த வீரம் சிந்தை ஈரமாம்
ஈர நெஞ்சில் கோரம் படியுமோ?
பாவம் பறக்கும்; ஆவி நலமுறும்;
குறைகளை முறையிடல் கரைபுரண் டோடின்
உலகம், தெய்வ உலக மாகும்
வையம் வளர்க தெய்வம் வாழ்க."

இங்ஙனம் நம் தமிழ் முனிவர்—அந்தணாளர்— தம் வாழ்நாள் முடிவு வரையிலும் நமக்கு அறிவுரை பகர்ந்தருளி, 17-9-53 வியாழன் இரவு 7-35 மணி வேளையில் அமருலகடைந்துவிட்டார். கடைசி நாட்களில், கந்தரநுபூதியும், திருவாசகமும் அப்பர் தேவாரமும் ஓதுவதைக் கேட்கப் பெரிதும் விரும்பினார்.

கண்ணொளி யிழந்தபின் இப்பெரியார் உலகுக் கருளிய அறிவுக்களஞ்சியங்களை அவர் படுக்கையிலிருந்து வழங்க அவற்றை எழுதிச் சேகரிக்கும் தொண்டும், பிழையற அச்சிடும் தொண்டும் உவகையுடன் புரிந்த நல்லோர்களையும் இங்குக் குறிப்பிடுதல் கடன். திரு. வி. க. வாய்மொழியாகச் சொன்ன அந்நூல்கள் எல்லாவற்றையும் 'சாதுஅச்சக'ப் பொறுப்பாளராகிய திரு. மு. நாராயணசாமி முதலியார் மனமகிழ்வுடன் பிழையற எழுதி அழகுற அச்சிட்டுதவியுள்ளார். பரம்பொருள் அல்லது வாழ்க்கைவழி என்னும் அரிய உரைநூலைத் திரு. வி. க. சொல்லிவர, எழுதியுதவியது செல்வி டி. சிவயோக வல்லியாகும். இப் பெண்மணி திரு. வி. க. வின் அருமைத் தமையனாரும், சைவ சீலரும், சமயப்பிரசங்க வல்லுநரும், தம்பியாரைத் தம் கண்ணும் ஆவியுமெனக் காத்துவந்தவருமாகிய திரு. வி. உலகநாத முதலியாரின் பேர்த்தி. இவ்வாறு எழுதப்பட்ட நூல்கள் அச்சாகுங்கால், கைம்மாறு சிறிதும் கருதாது அச்சுத்தாள்களைப் பார்வையிட்டு உதவியவர்களுள் சிறப்புவகையில் குறிக்கத் தக்கவர்கள் டாக்டர்-மு. வரத[illegible] தமிழ்ப் பேராசிரியர் - வித்துவான் - அன்ப[illegible]

126895

திரு. வி. க. அவர்கள் கண்ணொளி முழுதும் இழந்து படுக்கையோ டிருந்த காலத்தெல்லாம் அவர்கட்குப் பக்கத் துணையாயிருந்து அன்புடன் சேவை செய்துவந்த பழைய நண்பர் ஸ்ரீ சண்முகானந்த அடிகளாரது தொண்டும் மறக்கற் பாலதன்று. அங்ஙனமே, நம் பெரியாருக்குச் சில ஆண்டுகளாகவே மருத்துவ சிகிச்சையை உள்ளன்புடன் தொடர்ந்து செய்துகொண்டு யாதொரு ஊதியமும் பெறாது, அடியவர் தொண்டென ஆற்றிவந்த டாக்டர் - கந்தசாமிப் பிள்ளையவர்களது அன்பும் உபகாரமும் பெரிதும் போற்றற் குரியன.

எல்லாக் கட்சியினரும் திரு. வி. க. அவர்களிடம் அன்பும் உயர்மதிப்பும் வைத்திருந்தனர். இதற்கு ஒரு காரணம், இவர் யாவர்பாலும் குணங்களையே—நன்மைகளையே—கண்டு போற்றி உற்சாகப்படுத்தும் பண்புடையராய், புறங்கூறுதல் என்னும் புன்னெறி செல்லாத புனிதராய், வாழ்ந்தமையாகும். மேலும் அவர்பால் கண்ட இயற்கையான மதிநுட்பமும், நூற்புலமையும், தூய வாழ்வும், உலகப் பொது நோக்கும், கடலனைய கருணையும், வீரமும், மானமும், எளிமையும் மூவாசையும் வென்ற முனிவர் இயல்பும், சாதி சமயங்கடந்த தனிப் பரம் பொருளில் தளரா உணர்ச்சியும் இவரைச் சமரச சன்மார்க்கப் பெரியவராக—உலகுய்ய வழிகாட்ட வந்த உத்தமராக—மதித்து அஞ்சலி செலுத்துமாறு செய்தன. இவ்வுண்மை, இவர் பிரேத ஊர்வலத்தின் தனிச் சிறப்பினாலும், சென்னைக் கடற்கரையில் 4—10—53ல் பல கட்சியினரும் பல்லாயிரக் கணக்கில் ஒன்று சேர்ந்து நடத்திய அநுதாபக் கூட்டத்தினாலும் இனிது விளங்கியது. அன்றியும் கணக்கிலடங்காதபடி பல்வேறிடங்களில் அநுதாபக் கூட்டங்கள் நடந்துவருவதும் இதனையே வலியுறுத்தும்.

ஒருவர், ஏதேனும் ஒருதுறையில், தன்னலமின்றிப் பொதுநலத் தொண்டாற்றுவாராயின், அவரைப் பெரியவர் என மக்கள் பாராட்டுவர். திரு. வி. க. என்னும் நம் பெருமகனாரோ, மொழி, சமயம், அரசியல், சமுதாய சீர்திருத்தம், தொழிலாளர் மேம்பாடு, நூலியற்றல் என்னும் பல துறைகளிலும் முதல்தரமான பணிகளைக் கைம்மாறு கருதாது, கருமயோகியாய் - பெருந்தியாகியாய் - தமது 70-ம்



ஆண்டுவரை நிகழ்த்திவந்துள்ளார். இவர் போன்ற "மனிதரில் தலையாய மனிதர்"கள் உலகில் அபூர்வமாகத்தான் அவதரிக்கின்றார்கள். நம் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. தமிழகமட்டிற்கும் உரியவரல்லர். பாரதநாடு முழுவதுமே அவர் சரிதத்தையும், தொண்டுகளையும், அவர்தம் விழுமிய கருத்துக்களையும் அறிதல் அவசியம். ஆங்கிலம், இந்தி, பிற இந்திய மொழிகள் இவற்றிலும் இவர் பெருமை பரப்பப் பட்டால், நாட்டிற்கு நன்மை பெருகும். இத் தமிழ் முனிவரைத் தற்காலத் திருவள்ளுவரென்றும், தமிழ்நாட்டுக் காந்தியடிகள் என்றும், பாரதநாட்டின் மணிவிளக்கென்றும், வருங்கால ஒருகுடும்ப உலகிற்கு வழிகாட்டி என்றும், உலக மதிப்பிற்குரிய உத்தமரென்றும் கூறுதல் மிகையாகாது. " உண்டாலம்ம இவ்வுலகம் !...தமக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே", "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன், இன்பச் செவ்வி மன்பதை எய்த அருளறம் பூண்ட ஒரு பெரும் பூட்கையன்", "யாதும் ஊரே, யாவரும் கேளிர்", "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற சங்ககாலத் தமிழ்ச் சான்றோர்கள் திருவாக்குகட்கு இன்றைச் சான்றாக இலகுகின்றார் நம் திரு. வி. க. அவர் புகழ் என்றும் நிலவுவதாக ! "வையம் வளர்க ! தெய்வம் வாழ்க !"

---

# நீர்மையும் நேர்மையும்

[ம. பாலசுப்பிரமணியன்]

இருபத்தெட்டு ஆண்டுகட்கு முன்பொரு நாள் சாது அச்சுக்கூடம் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயரவர்கள் மாளிகைக்குச் சிறிது வடக்கே ஒருசிறு வீட்டில் இருந்தகாலம். 1924-ம் ஹு டிசம்பர்மீ திருப்பாதிரிப்புலியூரில், ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் தலைமையில், சைவசித்தாந்த மகா சமாஜத்தின் ஆண்டுவிழா சிறப்பாக நடந்தது. சுவாமிகள் இறுதியில், திரு. வி. க., சச்சிதாநந்தம் பிள்ளை முதலியோருடைய கூட்டுறவை, மறுபடியும் சமாஜம் பெறுதற்கு முயலவேண்டும் என்று எனக்குத் தெரிவித்தார்கள். இதை ஒட்டியே, சென்னைக்குத் திரும்பியவுடன் திரு. வி. க. அவர்

களை முதன் முதலாகச் சந்தித்தேன். சுமார் இரண்டு மணி நேரம் என்னுடன் அளவளாவி, நான் சமாஜக் காரியதரிசி என்பது பற்றித் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்து, எப்படியெல்லாம் சமாஜம் தொண்டுபுரிதல் வேண்டும் என்பதை மிக விரிவாக விளக்கினார்கள். சமாஜத்தில் பல ஆண்டுகளாகப் பற்பல வழிகளிற் பணிபுரிந்த பலருடைய பெயர்களைக் கூறி அவர்களையும் மிக விரைவில் சந்திக்கும்படி ஏற்பாடு செய்தார்கள். பழைய நண்பர்களைப் பற்றிக் கூறும்போது, அவர்களுடைய குற்றம் குறைகளையெல்லாம் மிக நேர்மையாகச் சொல்லி, அவர்களோடு எப்படிப் பழகினால் நலன் விளையும் என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொன்னது எனக்குப் பெரியபாடம் கற்பித்ததுபோல் ஆயிற்று. இத்துறையில் திரு. வி. க. அவர்கள் தமையனாரும் பேருதவி புரிந்தனர். உயிர் உண்டோ இல்லையோ என்ற நிலையிலிருந்த சமாஜத்தைக் கைகொடுத்துத் தட்டி எழுப்பி மீண்டும் புத்துயிர் பெறச் செய்தது இவ்விரு பெரியார்களுடைய தனிப்பெருந் தொண்டு என்பதை நமது சமாஜம் என்றும் மறத்தலாகாது.

பிறகு திரு. வி. க. அவர்களைக் காணும்போதெல்லாம் ஒருமணி, இரண்டுமணி நேரத்திற்குக் குறையாமல் பற்பல துறைகளிலுள்ள செய்திகளை அலசி அலசிப் பேசுவோம். என்னோடு விளையாட்டாகப் பேசுவதில் அவர்கட்குப் பெருவிருப்பம். பலமுறை அவர்களோடு வெளியூர்ப் பயணங்கள் செய்வதுண்டு. அப்போது என்னுடன் அவர்கள் மிக எளிய முறையில் பழகுவது வேறு சிலருக்குப் பெருவியப்பாக இருக்கும். இவ்வெளிமை சான்ற நீர்மையை அவ்வளவு மிகுதியாக வேறு எவருடைய நட்பிலும் யான் பெறவில்லை.

ஒவ்வொரு ஆண்டிலும் சமாஜவிழாவிற்குச் சொற்பொழிவு நிகழ்த்த அழைப்பேன். சில சமயம் மனமுவந்து ஒப்புக்கொள்வார்கள். சில சமயம் வர இயலாமைக்குத் தக்க காரணம் காட்டி வருந்துவார்கள். ஒருமுறை, 1937-ம்௵ வேலூரில் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் தலைமையில் நடந்த மகாநாட்டிற்கு வழக்கம்போல் அழைத்தேன். உள்ளுக்குள் வரவேண்டும் என்ற எண்ணம் இருந்தபோதிலும், வருவது சந்தேகம் என்றார்கள்.



அவர்கள் பெயரை நிகழ்ச்சிமுறையில் குறிப்பதாகவும், வந்தால் பேசவேண்டிய பொருள் “ சந்தேகம் ” என்றும் தெரிவித்தேன். தவிராது வந்து, சுமார் இரண்டு மணி நேரம் “சந்தேகம்” என்னும் பொருள்பற்றிப் பேசி, சமயத்துறையிலுள்ள பற்பல சந்தேகங்களையெல்லாம் விளக்கம் செய்தார்கள்.

பிற்கால வாழ்க்கையில் திரு. வி. க. அவர்கட்குக் கார்ல் மார்க்ஸ் கொள்கைகளில் அதிகமான பற்று. ஒருநாள் என்னோடு விளையாட்டாகப் பேசுகையில் மார்க்ஸ் கொள்கைகள் சைவசித்தாந்தத்தில் உள்ளனவா என்று கேட்டார்கள். உண்டு என்று கூறி மூன்று உதாரணங்களைக் காட்டினேன். உடனே அவைகளை யாழ்ப்பாணத்தில் கூட இருந்த சமாஜ ஆண்டுவிழாவில் நான் நிகழ்த்த இருந்த தலைமையுரையிற் குறிக்குமாறு கட்டளையிட்டார்கள். அவ்வாறே குறித்தேன். 'அதை மிகவும் பாராட்டிப் பலரிடமும் கூட்டங்களிலும் பேசினார்கள்.

“சித்தாந்தம்” பத்திரிகை 1928௵ புத்துயிர் பெற்று எழுந்தது. அதற்கு முன்பு எனது சொற்பொழிவுகளைக் கட்டாயப்படுத்தி எழுதச் செய்து, தமது “நவசக்தி” வாரப் பதிப்பில் வெளியிடுவார்கள். ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவரும் அருமையான சில விஷயங்களைப் பற்றி நாங்கள் சம்பாஷணை செய்வதுண்டு. அவைகளைத் தமிழில் மொழிபெயர்த்துத் தரும்படி வற்புறுத்தி “நவசக்தி”யில் வெளியிடுவார்கள். 1928ம் ௵ நான் சுமார் ஆறுவாரங்கள் இந்தியா முழுமையும் சுற்றுப்பிரயாணம் செய்தேன். அவற்றின் குறிப்புக்களைத் தொடர்ச்சியாக “நவசக்தி”யில் வெளியிட்டார்கள்.

திருப்போரூர் திருவிடவெந்தை முதலிய தலங்கட்கு யாத்திரை செய்து என்னோடு சிலநாட்கள் தங்கி அளவளாவுவதில் அவர்கட்கு மிகுந்த விருப்பம். அவைகளைப் பற்றியும் தமது வாழ்க்கை வரலாற்று நூலில் குறித்துள்ளார்கள். தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் ஆண்டுவிழாவில் 1928ம் ௵ டிசம்பர்௴ தாம் தலைமை வகித்தபோது என்னையும உடனழைத்துச் சென்று இரண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்துமாறு கட்டளையிட்டுப் பிறகு

ஒருவாரம் திருச்செந்தூர், ஆழ்வார்திருநகரி, ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி முதலிய இடங்கட்கெல்லாம் உடன் வருமாறு பணித்து, எனக்கு சொற்பொழிவுத் தலைப்புக்களைத் தாமே அமைத்துத் தருவார்கள். அவ்வாறு அமைந்த தலைப்புக்களுள் ஒன்று "பெரியபுராணம் ஒரு பொது உடைமைச் செப்பேட்டுப் பட்டயம்", மற்றொன்று "குகை" (இது திருவெண்ணெய்நல்லூரில் 6 நிமிஷத்திற்குள் பேசப்பெற்றது).

திரு.வி.க. அவர்கள் இயற்றிய நூல்கள் எல்லாவற்றிலும் மிகச்சிறந்தது, "பெண்ணின் பெருமை." அந்த நூல் வெளிவந்த பிறகுதான், தமிழ்நாட்டில் மேடைப் பேச்சுக் களில் மக்கள் பெண்களைப்பற்றி மரியாதையாகப் பேசத் தொடங்கினார்கள். பெண்களும் மிகுதியாக மேடைப் பேச்சுக்களில் கலந்து கொள்ளத் தொடங்கினார்கள். பெண்கள் சொற்பொழிவுகளில் தலைமை வகித்து அவர்கள் பேச்சைப் பாராட்டி ஊக்கம் அளிப்பதில் அவர்கட்குத் தனி இன்பம். சங்க நூல்களைப் பற்றி எல்லாப் பேச்சும் பெண் மணிகளே நிகழ்த்துமாறு ஏற்படுத்தி அவைகட்குத் தாமே தலைமை வகித்து மிக உயர்ந்த முறையில் கருத்துரை கூறினார்கள். திரு. வி. க. அவர்களுடைய அறுபதாம் ஆண்டு நிறைவுக் கூட்டங்கள் பலவற்றுள் முதலாவதாக நடந்தது, திருப்போரூர் முருகன் திருக்கோயிலில் ஒருபெண்மணியின் தலைமையில் நடந்த நமது சமாஜக்கூட்டமே. இவ்வாறு அமைக்கப் பெற்றதை வாயாரப் புகழ்ந்தார்கள்.

திரு. வி. க. அவர்களுடைய வாழ்க்கையிலிருந்தும் நூல் களிலிருந்தும் தமிழ்மக்கள் தெரிந்துகொள்ளவேண்டிய செம்பொருள்கள் நூற்றுக்கணக்கில் அடங்கா. அவர்கள் ஆன்மா எவ்வுலகத்திருப்பினும் நம்மை என்றும் மறவாது காத்தருளும். அவர்கள் நினைவு நமது வாழ்க்கையில் தனியிடம் பெற்று ஓங்கி வளரும். அந் நினைவு வாழ்க வாழ்க.

---

# தமிழ் முனிவர் திரு. வி. க.

[வெ. சாமிநாத சர்மா]

நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் ஒருங்கு நிரம்பிய
அறிஞர்கள் மத்தியில் தமிழ் முனிவர் என்றால் 'யார்
எங்கே' என்றெல்லாம் கேட்டுக்கொண்டிருக்க மாட்டார்
கள். அளவற்ற மரியாதையைக் குறிக்கும் அந்தச் சொற்
றொடர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களையே
குறிக்கும். அவரை அனைவரும் திரு. வி. க. என்றே செல்வ
மாக அழைப்பார்கள். அவர் மூதாதையர் ஊர் திருவாரூர்.
அவர் பெயருக்கு முன்னாலிருக்கும் திரு. என்பது இந்த
ஊரையே குறிக்கும். ஆனால் அவர் பிறந்தது துள்ளம்
என்னும் கிராமம். செங்கல்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த
சோழநாட்டுச் செழுமைசால் புலமையும், தொண்டை
நாட்டுச் சான்றாண்மையும் அவரிடம் சேர்ந்து மிளிர்ந்தன.
அவர் தந்தை பெயர் விருத்தாசல முதலியார். தாயார் பெயர்
சின்னம்மாள். அவர் பிறந்தது 1883-ம் வருஷம்.

திரு. வி. க. என்னும் பெயரைத்தாங்கிய அந்த உருவம்
இன்று நம்மிடையே இல்லை. ஆனால் தமிழ் உள்ளளவும்,
'திரு. வி. க.' என்ற அந்த நான்கு எழுத்துக்களும். அவை
குறிக்கும் அந்த மகானின் புகழைப் பறைசாற்றிக்கொண்
டிருக்கும். மனிதனுக்குச் சாவுண்டு; மகானுக்கு ஏது?

உலகில் எத்தனையோ மனிதர்கள் தோன்றுகிறார்கள்.
செல்வமும், அதனால் ஏற்பட்ட செல்வாக்கும் இருக்கும்
வரையில் அவர்களை உலகம் ஞாபகத்தில் வைத்துக் கொள்
கிறது. அதற்கு ஏதாவது ஊறு ஏற்பட்டால் ஜீவிய
தசையிலேயே அவர்கள் மறக்கப்பட்டு விடுவதைக் காண்
கிறோம்.

ஆனால் அந்திம காலத்தில் முதலியார் சாதுவாக ஓய்
வெடுத்துக்கொண் டிருந்தபோதுகூட அவருடைய செல்
வாக்கு வளர்ந்துகொண்டு வந்ததை யாரே அறிவார்?
ஏனெனில் அப்போதும் அவர் எடுத்துக்கொண் டிருந்தது
செயலற்ற ஓய்வன்று; செயல் நிறைந்த ஓய்வு. பம்பரம்
வேகமாகச் சுற்றுகிறபோது நின்ற நிலையில் இருப்பது
போலவே நமக்குத் தோன்றுகிறது. அதைப்போலவே உயர்ந்
தோர்களின் செயலும் இருக்கும். அவர்கள் வெளிப் பார்

வைக்கு மிகவும் அமைதியுடையவர்கள் போலவே இருப்பார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் தாம் சிறிதும் சலியாமல் உழைப்பார்கள். அவர்கள் கண்ணை மூடிக்கொண்டிருப்பார்கள். ஆனால் உலகத்தில் நடைபெறுகிற யாவற்றையும் காண்பார்கள். இது சம்பந்தமாகக் கீதையின் வாசகம் இங்குக் கவனிக்கத்தக்கது.

"தன்னிலே தான் இன்புறுவான், தன்னிலே தான் திருப்தி யடைவான், தன்னிலே தான் மகிழ்ந்திருப்பான், அவனுக்குத் தொழிலில்லை."

"அவனுக்குச் செய்கையில் யாதொரு பயனுமில்லை; செயலின்றி இருப்பதிலும் அவனுக்குப்பயனில்லை. எவ்விதப் பயனையும் கருதி அவன் எந்த உயிரையும் சார்ந்து நிற்ப தில்லை."

"ஆதலால் எப்போதும் பற்று நீங்கிச் செய்யத் தக்க தொழிலைச் செய்து கொண்டிரு. பற்றில்லாமல் தொழில் செய்துகொண் டிருக்கும் மனிதன் பரம்பொருளை எய்து கிறான்."

முதலியார், தமிழில் நிரம்பிய புலமையுடையவர் என்பது பலர் அறிந்த விஷயம். ஆனால் அவர் சிறுவயதில் ஆங்கிலத்தின்மீது அதிக மோகங் கொண்டிருந்தார் என்பதை ஒரு சிலரே அறிவர். அவரைச் சிறந்த தேசிய வீரராகவும், தலைசிறந்த எழுத்தாளராகவுமே தமிழ்நாடு தெரிந்துகொண் டிருக்கிறது. ஆனால் அவர் இளமையில் ஓர் ஆங்கிலக் கம் பெனியில் கணிதராக வேலை பார்த்தார் என்பதை ஒரு சிலரே அறிவர்.

இராயப்பேட்டை வெஸ்லி காலேஜில் தலைமைத் தமிழ்ப்புலமை நடத்தியவர் என்று அவரைத் தங்கள் நினைவிலே வைத்துக்கொண் டிருக்கிறார்கள் தமிழ்ப் பண்டிதர்கள். ஆனால் அவர் மேற்படி கல்லூரிப் பதவியை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர், சென்னை ஆயிரம் விளக்கிலிருந்த வெஸ்லியன் முதல்தர மூலாதாரப் பள்ளியிலும் வெஸ்லியன் டெக்னிகல் இன்ஸ்டிடியூட்டிலும் ஆசிரியராயிருந்தாரென்பது அநேகருக்குத் தெரியாது.

முதலியார், கல்லூரியின் ஆசிரிய பீடத்தைத் துறந்துவிட்டு, பத்திரிகையில் ஆசிரியர் பீடத்தை ஏற்றுக்கொண்ட காலத்தில் அவருடைய நண்பர்களாகிய புலவர் மணிகள்



பலர், அவரை இடைமறித்தார்கள்; கல்லூரி ஆசிரிய பீடத்தைத் துறந்துவிட வேண்டாமென்று பக்கம் பக்கமாக அவருக்குக் கடிதங்கள் எழுதினார்கள். 'கொள்ளை எரி அரசியலில்' குதிக்க வேண்டாமென்று எச்சரிக்கை செய்தார்கள். அவர்கேட்கவில்லை. தமக்கு இயற்கையாக அமைந்துள்ள புன்முறுவலால், அந்த எச்சரிக்கைகளை யெல்லாம் புறக்கணித்துவிட்டார். நாடின்றி மொழியில்லை யென்ற உண்மை இளமையிலிருந்தே அவருடைய உள்ளத்தில் பதிந்திருந்தது. அதனை வெளிப்படுத்த வேண்டிய சந்தர்ப்பம் வரவே அவர் சிறிதுகூடத் தயங்காமல் அந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொண்டார். அவருடைய நாட்டுப் பற்று, புலமைத் தொழிலுக்கு விடைகொடுத்து விட்டது; "தேசபக்தன்" ஆசிரிய பீடத்தில் அவரை அமர்வித்தது. புலமைக்குப் பெருநஷ்டம் ஏற்பட்டு விட்டதென்று புலவர்கள் அப்பொழுது வருந்தினார்கள். இப்பொழுது, முதலியாரின் தேசத் தொண்டினால் புலமைக்குப் பெருமை ஏற்பட்டிருக்கிறதென்று பெருமை கொள்கிறார்கள்.

2. முதலியார், அறநெறியிலே சென்ற உறுதியினர்; அன்பை அணிகலனாகப் பூண்டவர்; புலமையின் பொலிவினர்; நாட்டின் உயிர்நாடி எங்குளது என்று தெரிந்து கொள்ளும் ஆற்றல் படைத்திருந்தவர். எனவே போதனை செய்வதற்குத் தகுதியுடையவராயிருந்தார். இதனாலேயே அவருடைய வாழ்க்கையில் பெரும்பாகம், பள்ளியிலும், பத்திரிகையிலும் கழிந்திருக்கின்றது. போதனை செய்வதற்கான இடங்களல்லவோ இவையிரண்டும்?

முதலியார் 1917-ம் வருஷம் டிசம்பர் மாதம் 7-ந் தேதி "தேசபக்தன்" ஆசிரிய பதவியை ஏற்றுக்கொண்டபோது தமிழ்நாட்டின் அரசியல் துறை ஆங்கில மயமாக இருந்தது. அதனைத் தமிழ் மயமாக்கினார் முதலியார். தமது சொல்லாலும், எழுத்தாலும் நாட்டிலே ஒரு புத்துணர்ச்சியை உண்டு பண்ணினார். தமிழர்களுக்குத் தனிவாழ்வு உண்டு என்பதை உணர்த்தினார். திலகரின் சங்கநாதத்திற்குத் தமிழ் நாட்டில் எதிரொலி கொடுத்தவர் முதலியார். காந்தியடிகளின் அஹிம்சா இயக்கத்திற்குத் தமிழ்நாட்டில் உரமிட்டவர் முதலியார். அவருடைய அந்தக் காலத்துச் சேவைக்குத் தமிழ்நாடு என்றும் கடமைப்பட்டிருக்கிறது.

3. முதலியார் செல்வம் நிறைந்தவரல்லர்; ஆனால் செல்வாக்கு நிறைந்தவர். செல்வராவதற்கு அனேக வாய்ப்புக்கள் அவர்க்கு ஏற்பட்டன. ஆனால் அவற்றைஎல்லாம் அவர் உதறித் தள்ளிவிட்டார். இதற்காக அவர் நண்பர்களால் பரிகசிக்கப்பட்டும் இருக்கிறார். செல்வம் மனிதனைச் சீரழிக்கிறது என்பது முதலியாரின் கருத்து. அவர் ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தவர். இதனாலேயே, செல்வத்தைத் துச்சமாகக் கருதினார்.

4, முதலியார், ஏழை பங்காளன்; இந்தியாவிலேயே தொழிலாளர் இயக்கத்துக்கு அடிகோலியவர். எட்டினாற்போலிருந்து ஏழைமக்களிடம் அநுதாபம்காட்டும் சாமர்த்தியம் அவருக்குக் கிடையாது. உழைப்பின் வெற்றியை அவர் அறிந்தவர். அதனால் ஏழைகளின் குறையை உணர்ந்தவர்; ஏழைகளின் குறை தீர்ந்தால் நாட்டின் குறை தீரும் என்பது அவர் கோட்பாடு. “பொருளாதார உரிமையற்ற வெறும் அரசியல் உரிமை என்பது, பணக்காரர் ஆட்சியாய்ச் சாதிமதப் பூசல்களைப் பெருக்கி விரிப்பதாகும். நமது நாட்டுக்கு அரசியல் விடுதலையும் வேண்டும்; அதனூடே பொருளாதார விடுதலையும் விரவி நிற்றல் வேண்டும்” என்று தமது நூலொன்றில் கூறுகிறார்.

தொழிலாளர் நலனுக்காக அவர் தூங்காத இரவுகள் பல; அநுபவியாத துன்பங்கள் சில; சில வருஷங்களுக்கு முன்னர்கூட அவர் சென்னை ஆலைத்தொழிலாளர் வேலை நிறுத்தத்தின்போது வீட்டோடு காவல் வைக்கப்பட்டிருந்தார். அதிகார சக்தியின் உறுமல், குண்டுகளின் வீச்சு, தொழிலாளர்களின் வேதனை, தலைவர்களென்று முன்வந்தவர்களின் சமரஸப் பேச்சுகள் ஆகிய பலதிறப்பட்ட சக்திகளுக்கு மத்தியில் முதலியார், மனவமைதி குலையாமல், தொழிலாளர் நலன் ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டு அல்லும் பகலும் உழைத்த உழைப்பு தொழிலாளர்களின் இதயத்தில் சாசுவதமான முத்திரையிட்டிருக்கிறது. இலக்கியப் பூஞ்சோலையில் முதலியாருக்கு என்ன ஸ்தானம் உண்டோ அதற்குச் சமதையான ஸ்தானம் தொழிலாளர் உலகத்திலும் அவருக்கு நிச்சயமாக உண்டு.

5. முதலியார், சைவ சித்தாந்தத்தில் கரை கண்டவர்; ஆனால் சர்வ சமய ஞானப்பாலைப் பருகியவர். எல்லா மதங்



களும் ஓரே உண்மையைப் பல குரல்களால் வெளியிடுகின்றன என்பது அவர் கருத்து. “சத்தியம் சைவம் என்னும் சால்புறு மரபில் வந்தேன்; நித்தியச் சமயமெல்லாம் சமரசமாக் கண்டேன்” என்கிறார் ஓர் இடத்தில். உலகத்தில் துன்பங்கள் இரியவேண்டுமானால், செம்மை நெறி விரியவேண்டுமானால், சர்வ சமய சமரச ஞானமே தக்க மருந்து என்று பல இடங்களில் அவர் வலியுறுத்திக் காட்டியிருக்கிறார்.

6. முதலியார், இயற்கையில், ஈடுபட்டவர். மனிதன் என்று இயற்கை வாழ்வினின்று விலகிவிட்டானோ, அன்றே அவன் தூர்த்தனாகி விட்டான். கொலை, களவு, காமம் முதலிய பேய்கள் அவனைச் சுற்றிக் கொண்டன. அவனுடைய அரசியல் வாழ்வும் சமுதாய வாழ்வும் போலியாகி விட்டன. அவன், ஆசைக்கு அடிமையாகிவிட்டான். இந்த மாதிரியான கருத்துக்களை முதலியார் தமது நூல்களின் பல இடங்களில் வலியுறுத்தி யிருக்கிறார். அவருக்கு நகர வாழ்வென்றால், நரக வாழ்வாகவே இருந்தது. “கடுநரக நகர் சந்தை கருதாமை வேண்டும், பாழான பட்டணத்தைப் பாராமை வேண்டும்” என்றார் ஓரிடத்தில். ‘எந்தப் பொருளின்மீது ஒருவன் அதிகமான பற்றுள்ளம் வைக்கிறானோ, அந்தப் பொருள் அவனுக்கு எளிதில் கிட்டாததாகி விடுகிறது’ என்கிற வாசகப்படி, அவருக்கு எவ்வளவுக்கெவ்வளவு இயற்கையின்மீது பற்றுள்ளம் இருந்ததோ, அவ்வளவுக்கவ்வளவு அவருடைய வாழ்க்கை செயற்கைச்சூழலில் நடைபெற வேண்டியதாயிருந்தது. இதற்காக அவர் அடிக்கடி வருந்தியதுண்டு.

அந்த வருத்தம் நீங்கப் பெறாத நிலையிலேயே அவர் விரும்பாத சூழ்நிலையிலேயே அவருடைய பூவுலக வாழ்வுக்கு முடிவு ஏற்பட்டுவிட்டது. விதியின் விசித்திரமே!

எந்த இயற்கையின் போலிவிலே அவர் உள்ளத்தைப் பறிகொடுத்தாரோ, அந்த இயற்கையிலேயே அவர் இரண்டறக் கலந்து விட்டமைக்காக வருத்தப்பட நாம் யார்? வருத்தப்பட்டுத்தான் என்ன பயன்? அவர் சாதித்த காரியங்களைச் சிந்தனையில் கொண்டுவந்து செயலாற்ற முற்படுவோமாக.

—தினமணிக் கதிர்

# தமிழ்த் தந்தை திரு. வி. க.

[ரா. கிருஷ்ணமூர்த்தி]

தமிழுக்கும் தமிழ் எழுத்தாளர் குலத்துக்கும் தந்தையாக இருந்தார்; தொழிலாளர் குலத்துக்குத் தாயாகி விளங்கினார்; எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகிய திறத்தினால் அந்தணர் திலகமாகத் திகழ்ந்தார்; 'என் கடன் பணி செய்து கிடப்பதே!' என்ற திருவாக்கை வாழ்க்கையில் கடைப்பிடித்து நடந்தார்; தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழ்ந்தார்; அன்பே சிவம் என்ற உண்மையில் வாழ்க்கையெல்லாம் திளைத்திருந்தார்; இன்று அன்பிலும் சிவத்திலும் இரண்டறக் கலந்துவிட்டார் திரு. வி. கலியாணசுந்தர முனிவர்.

இயற்கையோடியைந்த இன்பத்தையும் இன்பத்தோடியைந்த இயற்கையையும் பற்றி இடைவிடாது சிந்தித்தும் பேசியும் எழுதியும் வந்த ஞானி இன்று இயற்கையோடு இயைந்து இன்பத்தோடு ஒன்றிவிட்டார்.

திரு. வி. கலியாணசுந்தரரின் புனித உடல் தீயிலே வெந்து சாம்பராகித் தெய்வத் தமிழகத்தின் மண்ணோடு மண்ணாகக் கலந்து விட்டது. எனினும், திரு. வி. க. 'இறந்துவிட்டார்' என்றோ, நம்மைப் 'பிரிந்து விட்டார்' என்றோ சொல்ல முடியுமா? நம் உள்ளம் அக் கூற்றுக்களை ஒத்துக்கொள்ள வில்லை. "ஈந்தவர் அன்றி இருந்தவர் யாரே?" என்றார் கம்பர். தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் தம்மையே தந்தவரான திரு. வி. கலியாணசுந்தர வள்ளலை இறந்தவரோடு சேர்க்க முடியுமா? அப்படியானால், இங்கு இருந்தவர் வேறு யார்?

என்றுமுள தென்தமிழைப்போல் திரு. வி. க. வின் அன்பு மயமான ஆன்மா இத் தமிழகத்தின் வெளியில் என்றும் நின்று தமிழ் மக்களை ஆசீர்வதித்துக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

அறுபத்து மூன்று நாயன்மார்கள் வானுலகில் வந்திருந்து "எங்களுடன் சேர்ந்து அறுபத்து நால்வராக ஆகி விடுங்கள்!" என்று அழைத்திருப்பார்கள்.



பன்னிரண்டு ஆழ்வார்களும் விஜயம் செய்து "எங்களுடன் பதின்மூன்றாவது ஆழ்வாராக அமருக!" என்று கூறியிருப்பார்கள்.

புத்த பிக்ஷுக்களும் சமண முனிவர்களும் கிறிஸ்தவ தபோதனர்களும் வந்து நல்வரவு கூறியிருப்பார்கள்.

எனினும், திரு. வி. க. அவர்கள், யான் அத்துணைச் சிறப்புக்கு உரியவனல்லேன்! தமிழன்பர்களின் அடியார்க்கு அடியேன்! தமிழகத்திலேயே இன்னமும் பணி செய்து கிடப்பேன்!" என்றுதான் மறுமொழி சொல்லியிருப்பார்.

இன்று தமிழ் நாட்டில் உள்ள அறிவாளிகள் எல்லாரும் தமிழ் மொழியைக் குறித்துப் பெருமை கொள்கிறார்கள். தமிழின் சிறப்பை அறிந்திருக்கிறார்கள். தமிழை மேலும் வளப்படுத்தப் பாடுபடுகிறார்கள். தமிழ்ச் சங்கங்கள், தமிழ்க் கழகங்கள், தமிழ்ப் பத்திரிகைகள் பல தமிழ் வளர்க்கும் துறையில் ஈடுபட்டிருக்கின்றன.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ் நாட்டின் நிலை வேறு விதமாக இருந்தது. "தமிழ் ஒன்றுக்கும் உதவாத மொழி" என்ற எண்ணம் பரவியிருந்தது. முக்கியமாக, அரசியல் பிரச்னைகளைப் பற்றித் தமிழில் எழுதவும் பேசவும் முடியாது என்று கருதினார்கள். அறிவாளிகளும் படித்தவர்களும் "தமிழில் எனக்குப் பேச வராது" என்று சொல்வதில் பெருமை கொண்டார்கள்.

அத்தகைய சூழ்நிலையில் திரு. வி. கலியாணசுந்தரனார் வெஸ்லி கலாசாலைத் தமிழாசிரியர் பதவியிலிருந்து விலகி வந்து "தேசபக்தன்" என்னும் தினப் பத்திரிகையின் ஆசிரியரானார். அப் பத்திரிகையில் தினந்தோறும் வெளியான தலையங்கங்களிலிருந்து தமிழ் மொழியின் வன்மை இத்தகையது என்பதைத் தமிழர்கள் கண்டு கொண்டார்கள். திரு. வி. க. வின் தலையங்கங்கள் ஆயிரமாயிரம் தமிழ் இளைஞர்களின் உள்ளங்களில் தேச பக்திக் கனலை மூட்டியது. அத்துடன் தமிழ் ஆர்வமும் பொங்கிப் பெருகச் செய்தது. தூய தமிழில் சொல்ல முடியாத பொருள் ஒன்றுமில்லையென்பது பலருக்கும் தெளிவாயிற்று. பழந் தமிழ் இலக்கியங்களிலிருந்து திரு. வி. க. பற்பல அழகிய

சொற்களைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்து தற்கால அரசியல் விவாதங்களில் உபயோகப்படுத்தினார். "அடடா! தமிழ் இத்துணை வளமுள்ள மொழியா?" என்று அனைவரும் வியந்தார்கள்.

கவிதை மூலமாகப் பாரதியார் தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் செய்த அரும் பணியைத் திரு. வி. க. தமிழ் வசன நடைமூலமாகச் செய்தார். எழுத்தினாலும் பேச்சினாலும் அத் திருப்பணியை அவர் ஆற்றினார். இனிய எளிய செந்தமிழ்ச் சொற்களைக் கொண்டும் அதிக நீளமில்லாத சிறிய வாக்கியங்களை அமைத்தும் திரு. வி. க. நிகழ்த்திய சொற்பொழிவுகள் மெத்தப் படித்த அறிவாளிகளையும் ஏட்டுக் கல்வியே பயிலாத தொழிலாளிகளையும் ஒரே சமயத்தில் கவர்ந்து மெய்ம்மறந்து கேட்டுக் கொண்டிருக்கும்படி செய்தன.

பெஸண்ட் அம்மையாரின் 'ஹோம் ரூல்' இயக்கம் நடத்திய காலத்தில் வீராவேசங் கொண்ட தேசபக்தராகப் பொதுப் பணியில் ஈடுபட்ட திரு. வி. க. வை, சில ஆண்டுகளுக் கெல்லாம் காந்தியடிகள் ஆட்கொண்டு விட்டார். வீராவேசக் கலியாணசுந்தரர் சாது கலியாணசுந்தரராக மாறிவிட்டார். காந்தியடிகளின் அஹிம்ஸா தர்மமும் அன்பு மதமும் அவருடைய உள்ளத்தில் குடிகொண்டன; அவருடைய எழுத்திலும் பேச்சிலும் ஒளிர்ந்தன. "மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்" என்ற நூல் எழுதிய பின்னர் அவருடைய வாழ்க்கை காந்தீய நெறியிலிருந்து அப்பால் இப்பால் அகலாமல் சென்று கொண்டிருந்தது.

பாரத நாட்டுக்கும் பாரத சமுதாயத்துக்கும் உரிய சிறப்புக்களில் தனிப்பெரும் சிறப்பு,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்னும் வள்ளுவர் வாக்கில் அடங்கி யுள்ளது. அந்தத் தனிப்பெரும் சிறப்பைத் திரு. வி. க. வின் வாழ்க்கையிலும் எழுத்திலும் காணலாம். சைவம், வைஷ்ணவம், பௌத்தம், சமணம், கிறிஸ்துவம், இஸ்லாம் ஆகிய எல்லாச் சமயங்களிலும் உள்ள அடிப்படையான உண்மைகளைச்



சமன் வயப்படுத்தும் சமரச சன்மார்க்க நெறியைத் திரு. வி. க. இடைவிடாமல் எடுத்துக் கூறி வந்தார். தாம் எழுதியுள்ள ஐம்பதுக்கு மேற்பட்டுள்ள நூல்களிலும் அந் நெறியை விளக்கியிருக்கிறார்.

அது போலவே சமூகத் துறையில் காந்தீயத்தையும் மார்க்ஸீயத்தையும் இயைவிப்பதற்குத் திரு. வி. க. முயன்று வந்தார். காந்தீயத்தின் அடிப்படையான அஹிம்ஸையும் சத்தியமும் திரு. வி. க. வைக் கவர்ந்தன. மார்க்ஸீயத்தின் இலட்சியமான பொது உடைமைக் கொள்கையும் திரு. வி. க. வைக் கவர்ந்தன. எனவே, அன்பு நெறியைக் கடைப்பிடித்துப் பொது உடைமைச் சமுதாயத்தை அமைக்கும் வகையைப்பற்றி இடைவிடாது சிந்தித்தும் பேசியும் எழுதியும் வந்தார்.

திரு. வி. க. கடைப்பிடித்தும் எழுதியும் பேசியும் வந்த அன்பு நெறியானது அவரை அன்புமயமாக்கியது. அவருக்குப் பகைவர் என்பவர் யாருமில்லாமற் செய்தது. அவருடன் பழகியவர்கள் அனைவரும் அவருடைய நண்பர்கள் ஆனார்கள்; நண்பர்களாகவே இருந்து வந்தார்கள்.

திரு. வி. க. நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாயிருக்கும் செய்தி அறிந்து அவரைப் பார்க்க எத்தனையோ நண்பர்கள் வந்தார்கள். "நாங்கள் செய்யக்கூடிய பணி ஏதாவது இருக்கிறதா? ஏதேனும் செய்வதற்கு வாய்ப்புக் கிடைத்தால் அதைப் பெறற்கரிய பேறாகக் கருதுவோம்" என்று பலரும் தெரிவித்துக் கொண்டார்கள். அவர்களுக் கெல்லாம் "உங்களுடைய அன்பே போதும். வேறு ஒன்றும் வேண்டாம்" என்ற பதிலையே திரு. வி. க. கூறி வந்தார்.

திரு. வி. க. வின் மனைவியார் பல்லாண்டுகளுக்கு முன்னரே அவரைப் பிரிந்து சென்றார். சொந்தக் குழந்தையும் இல்லை. ஆனால் அவருடைய தமையனாரின் குடும்பத்தார் திரு. வி. க. வுக்கு எந்தவிதமான குறைவும் இல்லாதபடி அன்புடனும் ஆதரவுடனும் பராமரித்து வந்தார்கள்; வேண்டிய பணிவிடைகளும் செய்துவந்தார்கள். அன்பே வடிவமான ஒருவருக்கு யார்தான் ஆர்வத்துடன் பணிவிடை செய்ய முன்வரமாட்டார்கள்?

—கல்கி

* * *

# திரு. வி. க. அனுதாபச் செய்திகள்

## கண் செய்த பாவம்!

தமிழில் ‘பெண்ணின் பெருமை’ என்னும் நூல் இருப்பதுபோல் உலக மொழிகளில் வேறு எதிலாகிலும் இருக்கிறதா என எவ்வளவோ ஆராய்ச்சி செய்து பார்த்தேன். தெரிந்தவர்களையும் கேட்டுப்பார்த்தேன். ஒருவராவது உண்டு என்று சொல்லவில்லை. வள்ளுவர் பெருந்தகை கூட, ‘பெண்ணிற் பெருந்தக்க யாவுள?’ எனக் கேள்வி கேட்டு பெண்ணின் பெருமை கூற வந்தவர் போல நடித்து, பெண்ணின் மீது எவ்வளவோ பொறுப்புக்களைச் சுமத்திவிட்டுச் சென்றார். இத்தகைய மகத்தான பொறுப்புக்களை ஆண்மீது அவர் சுமத்தவில்லை என்பது அறிஞர்களின் நினைவிலிருக்க வேண்டும். வள்ளுவரே கைவிட்டால், மற்றவர்களைப் பற்றிக் கேட்கவேண்டுமா? பேதை, பேய், பாவத்தின் உருவம், ஆசைக் கொள்கலம், இழிந்த பிறவி என்றெல்லாம் பெண்ணை அடித்து நொறுக்கிவிட்டார்கள்.

இவ்வாறு யுகயுகாந்தங்களாக ஏறிவந்த மாசினைப் போக்கி, பெண் உருவத்தைத் துப்புரவுசெய்து, மெருகிட்டு, ஒப்பனை செய்து, அதை ஒரு மணி மண்டபத்தின் நாப்பண் கொலுவீற்றிருக்கச் செய்த பெருமை எங்கள் தந்தை திரு. வி. க. ஒருவருக்கே உரியதாகும். இவ்வொரு செய்கைக்காகவே உலகத்துப் பெண் குலம் இப்பெரியாருக்கு என்றென்றும் கடமைப்பட்டதாகும்.

ஆகவே, அவர் மனித மேனியின் இறுதி யாத்திரையின்போது ஒரு பெண் சேனையே தொடர்ந்து வந்து மரியாதை செலுத்தும் என மனப்பால் குடித்தேன். ஆனால் அன்று நான் கண்ட காட்சி என்ன! என் கண் செய்த பாவம் கடலிற் பெரிது என்றுதான் என்னை நொந்து கொண்டேன். விரல்விட்டு எண்ணி விடக்கூடிய ஒருசில பெண்மணிகள்தாம் பிரேத ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள். ஆனால், பெண் குலத்தை இழிவுபடுத்துகிற ஒரு மட்டரகமான சினிமாப் படம் பார்ப்பதற்கு டிக்கெட் வாங்க பெண் பட்டாளம் முண்டியடித்து முன்னேறுவதைப் பார்க்கவேண்டுமே! உண்மையிலேயே பெண் ஜன்மம் பாப ஜன்மந்தானா?

ஐயோ, நன்றிகெட்ட பெண்குலமே, உனக்கு ஏதாகிலும் நல்ல எதிர்காலம் உண்டா?

வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார், சென்னை

* * *

## நெறி நின்ற நீர்மையர்

இப்போது தமிழ் நாட்டின் அழகு மறைந்து விட்டது. ஆம். திரு. வி. க. முதலியாரவர்கள் தம் பெயரில் மட்டுமல்ல; உருவத்திலும் கலியாணசுந்தர மாகத்தான் விளங்கினார். மழுங்க க்ஷவரம் செய்துகொண்டு, தூய வெண்மையான கதராடை யுடுத்தி, திருநீறும் சந்தனப் பொட்டும் அணிந்து, பொன் விளிம்பிட்ட மூக்குக் கண்ணாடி தரித்து, ஒடிந்து விழும் பூங்கொடிபோல் எழுந்து நின்று அவருக்கு இயற்கையாயுள்ள இடக்கைச் சுட்டுவிரலை ஆட்டி ஆட்டி, கண் சிமிட்டிக்கொண்டு, சிறுசிறு வாக்கியங்களாகப் பேசும் அழகைக் கண்டவர், அவர் வயதையும் நிலைமையையும் மறந்து, அவர் ஓர் மணமகன் என்றே கருதுவர். இனி அந்த தெய்வீக அழகு வாய்ந்த திருமுகத்தை எப்போது எங்கே காணப்போகிறோம்? எத்துணைக் கீழோராயினும் அவருக்கு எளிவந்து சுலபத்தில் காட்சியளித்து அவர் குறைகளைப் பொறுமையோடு செவி மடுத்து இங்கித மொழிகள் கூறும் அந்த மனப்பான்மை திரு. வி. க. ஒருவருக்கே உரியது. சுருங்கச் சொல்லுமிடத்து அவர் எல்லாருக்கும் நல்லவர். மனத்தாலும் சொல்லாலும் செயலாலும் தூயவர். சைவ நெறி நின்று வாழ்ந்த உத்தமர்.

அவரைப் போன்ற மற்றொருவரை அத்துணை எளிதில் பெற்றுவிட முடியாது. பழமையையும் புதுமையையும் பிணைத்திருந்த சங்கிலியின் இறுதிவளையம் இன்று அற்று விழுந்துவிட்டது.

என் செய்வோம்! அவர் பெயரைச் சொல்லிக் கொண்டே சைவத்தையும் தமிழையும் வளர்ப்போமாக!

வல்லை - பாலசுப்ரமணியம், M.A.

* * *

## என் செயப் போகிறோம்?

தமிழ் நாடு செய்தவப்பயனாய்த் தோன்றிய தமிழ்ப் பெரியார் திரு. வி. க. வைப்பற்றி இந்நிலையில் என்ன கூறுவதென்றே தோன்றவில்லை. “பெண்ணின் பெருமை” யால் அன்னார் போற்றிய பேணிய பெண் குலம் ஒரு பெரியாரை இழந்துவிட்டது! உடல் பொருள் ஆவி கொடுத்து உழைத்துயர்த்திய உழைப்பாளருலகம் இயக்கப் பெரியார் ஒருவரை இழந்துவிட்டது! புரட்சி பொங்கும் இளைஞருலகம் புத்துயிர்ப் புரட்சி வீரரைப் போகவிட்டுப் பரிதவிக்கின்றது! கன்னித்தமிழை இக்கலியுலகிலும் கவின்பெறச் செய்யும் கவிஞருலகம் எளிய, தெளிய, இனிய நடையால் தமிழுக்கு ஏற்றங்கொடுத்த கவிஞரை இழந்து வருந்துகின்றது. ஏன்! தமிழ்நாடே தன் தவப்புதல்வர் ஒருவரை யிழந்து தத்தளிக்கின்றது! மறைந்த மாபெருந் தலைவர்க்குத் தமிழ்நாடு என் செயப் போகின்றது? இறுதி நாள் வரை ஏற்பதிகழ்ச்சி யென்றல்லவா எதனையும் எவரிடத்தும் ஏற்க மறுத்துவிட்டது அவர் தம் பண்பட்ட தமிழுள்ளம்! அன்னாரை இழந்து நிற்கும் இன்றாயினும் அனைவரும் ஒன்று கூடி ஏதேனும் ஒன்று செய்ய முற்படுவோமா? சமரசத்தையே தன் வாழ்க்கைச் சமயமாக் கொண்ட பெரியாருக்கு மணி மண்டபம் போன்றதோர் நிலையாய நினைவு நிலையம் நிறுவுவதிலேனும் கட்சி, கொள்கை, கருத்து வேறுபாடின்றி அனைவரும் ஒன்று சேர முற்படுவோமா? என்செயக் கடவோம்? அவரோடு தொடர்பு கொண்ட நமது சமாஜத்தார், ஏனைய சபையோர் அனைவரும் ஒன்று கூடி, தருமமிகு சென்னையில் திரு. வி. க. அவர்கட்கு நிலையாய நினைவு நிலையமொன்று நிறுவுவோமாக.

அ. கு. காமாட்சி, M.A., தமிழாசிரியை, சேலம் கல்லூரி

* * *

தமிழ் நாட்டுத் தலைநகராகிய சென்னையில் அன்னைக்குத் தொண்டு செய்ய, இராயப்பேட்டையில் ஓர் அச்சகம் நிறுவி, மொழியை வளம்படுத்தவும் தமிழர்களுக்கு



நல்லறிவை கொளுத்தவும் “தேசபக்தன்”—‘நவசக்தி’ ஆகிய செய்தித்தாள்களை நடத்தியும், பல நூல்கள் எழுதியும் வந்த திரு. வி. க. அவர்கள் சென்ற 17—9—53 ல் இறைவனடி சேர்ந்தது மிகவும் வருந்தத் தக்கது. அவர் சைவ சமயத்தைப் பாதுகாக்கவும், வளர்க்கவும் பல மேடைகளில் பேசியும் எழுதியும் வந்தார். பெண்களின் நிலையை உயர்த்த “பெண்ணின் பெருமை” என்ற நூலை எழுதி வெளியிட்டார். அவர் பிறந்து அறிவு தெரிந்தது முதல் நாட்டுக்கும், மக்களுக்கும், மொழிக்கும், சைவத்துக்கும் உழைத்து வந்தார். தனக்கென வாழாப் பிறர்க்குரியவராக இருந்து வந்தார். அவருடைய பிரிவு என்றும் ஈடு செய்ய முடியாத ஒருபிரிவே யாகும். அன்னாருடைய ஆன்மா சாந்தியுறுவதாக.

திருமந்திரமணி-துடிசைகிழார்-அ. சிதம்பரனார்

* * *

## திரு. வி. க.வும் பெண்ணுரிமையும்

இயற்கையில் இறையின்பம் நுகர்தலே நியதி. உலகியலின் ஒருகூறு பெண்; நாம் காணும் பெரும் பொருட்டொகுதி இயற்கையின் பாற்பட்டதே. யாவரும் செயற்கை நரகின் வெம்மை சூழ வாழுகின்றோம். ஆதலின் இறைவனையும் செயற்கை யாக்கி நினைக்கிறோம். நடமாடும் கோயிலுள் நாதன் உறைவதை நன்கறிந்துணர்த்திய ஞானியர் தோன்றிய இப்புவிமிசை வந்த நாம், திரு. வி. க. கண்ட முதல் வடிவமெது? அதன் தன்மை யென்னை? இன்றதன் தன்மை யென்னை? என ஈண்டுச் சிறிது கூறுவாம்.

இயற்கை அழகெலாம் ஒருங்கே திரண்டு உலவும் இறைமையின் வடிவமான ஒன்றனை அவர் முதற்கண் கண்டாராம். அவ்வடிவம் யாதென யான் ஈண்டுக் குறிப்பதற்கு முன்பே நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். அவரது உயிர்ப்பின் ஒலியில் அவ்வடிவம் புகாமலிருப்பதில்லை. அஃது எது? அது நம் அனைவரையும் ஈன்ற அன்பு வடிவம்.

“அன்னையும் பிதாவும்......”. “அம்மையே அப்பா” என்று நாம் முதற்கண் கண்ணுறும் பொருளாக அம்மையை அமைத்துள்ள உலகில் வாழ்ந்து, பின் இறையுடன் இரண்டறக் கலக்க வேண்டிய நிலையிலும், “மெய்யருளாம் தாயுடன் சென்று பின் தாதையைக் கூடிப் பின் தாயை மறந்தேயுமதே வீட்டை” என்றார். ஆன்றோர் முதற்கண் தாயே முன்வந்து நிற்கின்றாள். அன்னையுணர்த்த வன்றோ அப்பனை நாம் உணருகின்றோம்! ஒரு குழந்தையின் முதல் உலகம் பெண்மையால் காட்டப்படுகின்றது. அங்ஙனமே அவன் ஞானவெளியை அடைந்து இன்புறவும் அன்னை வழிகாட்டுகின்றாள். இதனின் அறிவது, உலகத்தோற்றத்திற்குத் தாய்மையும், இறைமையுமே காரணமாகும் என்பதாம்.

இனி அன்னையை வழிபடுவது உலக இயற்கை. ஏனெனில் அவள் நம்மை வழிப்படுத்துகின்றாள். எங்கும் எதற்கும், எஞ்ஞான்றும் தன் மெய்யான தூய அருள் தொண்டினால் செயல் புரிகின்றாள். இறையின் ஒரு கூறு பெண். இறையில் இக்கூறு இல்லையேல், உலகிலும் பெண் தோற்றமேயிராது. இவ்வாறாக இறைவனை இரு கூறாக்கி அதனில், அன்பை, அருளை, திருவை, பொறையை அழகுபடப் பெய்து காணும் வழித்தோன்றல்கள் வாழும் நம் நாட்டில் பெண்ணடிமை எவ்வாறோ நுழைந்துவிட்டது. வேத காலத்திலே, சங்க காலத்திலே, பெண்கள் உரிமையின்பம் நுகர்ந்தார்கள். தமிழ் நாட்டில் பெண்ணுரிமையைப் பறித்துத் தாயை அடிமைப்படுத்திய பாவம் நாட்டைச் சூழ்ந்துள்ளது. பெண்ணினத்திற்கு விதித்துள்ள கட்டுப்பாடுகளை உன்ன உன்ன உளம் உருகுகிறது. இவற்றை விதித்தவரின் நெஞ்சைக் கல்லெனக் கழறுவதா? அல்லது இரும்பென இயம்புவதா? பெண்ணைப் பேணாத பேதையர் வாழ்வு நாட்டின் உரிமைக்கும் பெருமைக்கும் ஊறு தேடுவதே யன்றி, நற்பேறு தருவதல்ல. பெண்ணுலகின் நிலைகொண்டே ஒரு நாட்டின் நாகரிகத்தை அளந்துணர்தல் வேண்டும். பண்டைப் பெண்ணினம் செய்த வீரச் செயல்களையும், அருட்செயல்களையும் கேட்டு பெருமூச்சு விட்டுக் கண்ணீர் வடிக்கின்றது பெண்ணுலகம்.



இயற்கையினின்றும் திரண்டெழுந்த அன்புக் கொழுந்தன்றோ பெண்ணினம்! தாயாகவும், மனைவியாகவும், தங்கையாகவும், மகளாகவும் நின்றல்லவோ பெண்கள் உலகை வளர்க்கின்றார்கள்! பெண்ணோடு கூடி வாழும் வாழ்வன்றோ இயல்பான இறையன்பைக் காட்டும் வாழ்வாகும்! தனித்தனியே உணர்ந்து இன்புறத் தக்க அழகெலாம், திரண்ட தூய வடிவமாம் பெண்வடிவம்.

‘முருகன் அல்லது அழகு’ என்ற நூலில் திரு. வி. க. அவர்கள் ‘அருணகிரியாரும் பெண்களும்’ என்ற தலைப்பில் கூறும் சிறந்த கருத்துக்களாவது: அருணகிரியார் தம் இளமையில் பெண்ணை அவர் காமக்கூடாகக் கருதி எரியிடை யிடர்ப்பட்டார். காமஎரி தணிக்கும் தண்புனல் அவர்க்குப் புலனாயிற்று. வெம்மைக்குழி வீழ்ந்த அவர் காயகற்பம் உண்டாரில்லை. கடவுட் காட்சியால் காமத்தைக் கடந்தார். மானம் விற்றலுக்கே பெண்ணாகப் பிறந்தோம் என்று கருதி வாழும் பொது மகளிரையே வெறுக்கிறார். ஷேக்ஸ்பியர் நாடகங்களில் பெண் மக்களே தலையங்கம் பெறுகின்றனர். பெண்ணைப் பற்றி வருணனை கூறுமிடத்தில் ஆசிரியர் இயற்கையையே ஒப்புமை கூறுகின்றனர்.

திருவெம்பாவையில் பெண்மக்களை முன்னிலைப்படுத்திப் பாடியுள்ளதை அறியலாம். சித்தர்களும் பலபடியாகப் பெண் யக்களை முன்னிலைப்படுத்திப் பாடியுள்ளனர். பண்டு அரசியல் அறிவிலும், வீரத்திலும், கவிபாடும் வன்மையிலும், சிறந்து கற்புடையவர்களாகத் திகழ்ந்த மகளிர் இன்று தாழ்த்தப்பட்டு வருவதைப் பார்த்தால் மனம் வருந்துகிறது.

இந்நிலை மாறவேண்டும். ‘பெண்ணிற் பெருந்தக்க யாவுள’ என்ற வள்ளுவர் கருத்திற்கிணங்க; பெண்ணை வெறுக்காமல் போற்றி, பெண்மையில் இறைமை கண்டு போற்றி வாழ்ந்து வருமாறு ஆணுலகிற்கு விண்ணப்பம் செய்து கொள்ளுகிறேன்.

S. இலக்குமி, ஆசிரியைப் பயிற்சிப்பள்ளி, கோவை

## யான் கண்ட திரு. வி. க.

திரு. வி. க. அவர்களை இருபத்தைந் தாண்டுகளுக்கு மேலாக அறிவேன். அவர்கள் பழக்கத்தால், நான் கொஞ்சம் எளிமையும் பணிவும் பெற்றுளேன் ; என்னால், அவர்கள் அடைந்த தொன்றுமில்லை. நாங்கள் ஒருவரை யொருவர் முதல் முதல் கண்டு பேசியது—அல்ல, அவர்கள் என்னைத் தேடி வந்து பார்த்தது, இருபத்தைந்தாண்டுகளுக்கு மேலாகும். அப்பொழுது அவர்கள் தேசபக்தன் ஆசிரியர். சீவில்லிபுத்தூர் தாலூகா காங்கிரசு அரசியல் மாநாட்டில் தலைமை வகிக்க அங்கே வந்திருந்தார்கள். நான் ஆண்டாள் சந்நிதித் தெருவில் ஒரு பொதுநல அலுவலகத்தின் முகப்பில் ஏதோ காரியமாக இருந்தேன். 'நல்ல குற்றாலம் பிள்ளையைப் பார்க்கலாமா' என்று அவ்வழியே வந்த திரு. வி. க. அவர்கள் கேட்க, அவர்கள் கூட வந்தவர் என்னை நன்கு தெரிந்தவர், 'அவரைப்பார்க்க வேண்டுமா? நமக்கு நேரமாகவில்லையா? அவர் Justice Party காரரா?' என்று பதிலளித்தார். 'Justice Party காரர் என்றாலென்ன? என்று திரு. வி. க. அவர்கள் சொல்லவும், கூட வந்தவர் 'அவர் இந்நேரம் இங்கே யிருந்தாலுமிருப்பார்' எனச் சொல்லிக் கொண்டு இருவருமாக நான் இருக்குமிடம் நோக்கி வந்தார்கள். இந்தப் பேச்சைக் கேட்ட நான் அவர்கள் வருகையையும் கண்டதும் எதிர்சென்று வரவேற்றுச் சில நிமிடங்கள் பேசிக்கொண்டிருந்துவிட்டு, நானும் அங்கே வருகிறவன்தான் என்று சொல்லி அவர்கள்பின் சென்று கூட்டம் முடியும் வரையிருந்து, அவர்களுடன் அவர்கள் தங்கியிருந்த இடத்திற்குப் போய்த் தாராளமாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டு வீடு சென்றேன்.

இன்றைக்குப் பதினேழு ஆண்டுகளுக்குமுன், 'பழந்தமிழன் ஒழுக்கமும் தற்காலப் போக்கும்' என்றொரு கட்டுரை நவசக்திக்கு எழுதியனுப்பினேன். அந்தக் கட்டுரையைத் தூக்கிக் காட்டும் வகையில் பல பத்திகளுக்கும் தலைப்புக் கொடுத்து வெளிவந்தது. அது முதல் நவசக்தி நிற்கும் வரை அடிக்கடி கட்டுரைகள் நானே தலைப்புக் கொடுத்தும் எழுதிவந்தேன். என்றாலும், என்



தலைப்பும் வாசகமும் திருத்தியும் வரும். இப்படியாக, அவர்கள் உறவால் நான் திருத்தமும் பெற்றேன்.

இன்றைக்கு ஆறேழாண்டுகளுக்குமுன், பெண்கள் சங்க விழாவில் தலைமை வகிக்க விருதுநகர் வந்திருந்தார்கள். அவர்கள் பேச்சைக் கேட்டும் நேரில் பார்த்து உடல் நலம் விசாரித்தும் வர, இங்கிருந்து போயிருந்தேன். கூட்டம் முடியவே இரவு 11–மணி யாகிவிட்டது. பின் அவர்கள் தங்கியிருந்த பங்களா வந்து சேரவும் 1–மணியாகிவிட்டது. வந்ததும், ஒரு ஒதுக்கிடத்திற்குப் படுக்கையைக் கொண்டுவரச் சொல்லி படுத்துக்கொண்டார்கள். அதன் பின்தான் அவர்கள் வந்துவிட்டதை யறிந்தேன். ஒரு வேளை தூங்காதிருந்தால் அவர்களைப் பார்த்துவிடலாமே யென்று அங்கே போய் அருகில் விழித்திருந்தவரை 'ஐயா, படுத்து ரொம்ப நேரமாயிருக்குமோ?' என்று கேட்டேன். அவர், 'ஆமாம், இந்நேரம் பார்க்க முடியாது, காலையில் வந்து பாருங்கள்' என்று சொல்லி முடியுமுன், திரு. வி க. அவர்கள் விழித்து எழுந்து 'ஐயாவா வாருங்கள், உட்காருங்கள்' என்று சொல்லி சம்மணமும் போட்டு உட்கார்ந்து கொண்டார்கள். நானும் உடல் நலம் விசாரித்துக் கொண்டு சீக்கிரம் கிளம்பிவிடலாமென்று உட்கார்ந்தேன். நம் நாட்டின் நிலைமை இந்தப் பக்கங்களில் எப்படியிருக்கிறதென்று கேட்டார்கள். எனக்குத் தெரிந்ததை அவர்களுக்குக் கேள்விச் சிரமும் இருக்கக் கூடாதென்று கொஞ்சம் விரித்தே சொல்லி வந்தேன். "ஏன் அப்படியிருக்கிறது? என்ன செய்யலாம்? ஏது செய்யலாம்? யாரும் இது பற்றிக் கவனிக்கிறதில்லையா? நீங்கள்தான் என்ன செய்கிறீர்கள்? என்று சரமாரியாக இடைமறித்துக் கேட்டு வந்தார்கள். "காங்கிரசுக் கிளர்ச்சி வந்ததிலிருந்து எங்கும் பழைய பெரிய ஆட்கள் ஒதுங்கிக் கொண்டார்கள். காங்கிரசுக்காரரிடம் ஆரவாரப் பேச்சும் தன்னலச் சூழ்ச்சிகளும்தான் மலிந்திருக்கின்றன. பொதுநல வேலைகளில் அவர்கள் ஈடுபடுவதுமில்லை ; ஈடுபட்டாலும், அவர்களைப் பின்பற்ற மக்கள் தயாராக இல்லை. நாட்டைப் பாழாக்கும் பிரசாரங்களும், பத்திரிகைகளும், நூல்களும் மலிந்துவிட்டன. மக்களும் முன்போலில்லை ; இப்பொழுது கொஞ்சம் தெரிந்திருக்கிறார்கள் ; எல்லாம் வந்துவிட்டதென்று நினைக்

கிறார்கள் ; பிறர் எவரையும் குறைவாகப் பேசுவதில் ஒரு பெருமை கொள்கிறார்கள். காபி, பீடி, சிகரெட் தாராள மாகக் குடிப்பதனாலே தங்கள் வாழ்க்கைத்தரமே உயர்ந்து விட்டதாகக் கருதுகிறார்கள். நல்லது எதைச் சொன்ன லும் அவர்கள் கேட்கத் தயாராக இல்லை. அரசாங்கத் திற்கும் நாட்டின் நிலைமை பற்றிக் கவலையில்லை ; கவலைப் பட்டாலும் மக்களின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்கக் கூடாத நிலைமையில், அதன் முயற்சியும் செலவும் வீணாகவே கழியும்!' என்றேன். “இப்படித்தான் எங்கும் இருக்கிறது : என்னதான் செய்கிறது” என்று பெருமூச் செறிந்தார்கள். அம்மட்டில், நான் விடைபெற்றுக் கொண்டேன். அவர்களுக்கிருந்த கவலையில் பின்னும் கொஞ்ச நேரம் அவர்கள் தூங்கியிருக்க முடியாது.

திரு. வி. க. அவர்களின் முதல் சந்திப்பிற்குப்பின் ஏகதேசம் அவர்களுடன் கடிதப் போக்குவரவும் உண்டு. சென்னையிலும், பிற இடங்களிலும் பின்னும் சந்தித்திருக் கிறேன். என்றாலும், விசாரித்துத் தெரிந்தாலன்றி என்னைத் தெரியமுடியாத ஒரு காலத்தில், தானாக என்னை அவர்கள் வந்து கண்ட எளிமையையும், தமிழ் நாட்டின் நிலைமை பற்றி அவர்கள் பெருங் கவலைப்பட்டு வந்ததையும் நான் என்றும் மறக்கமுடியாது. அவர்களின் ஆன்மா சாந்தி பெறுவதாக.

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, இராசபாளையம்

* * *

## சித்தாந்த சைவர் திரு. வி. க.

திரு. வி. க. அவர்களைச் சுமார் நாற்பத்தைந்து ஆண்டு களாக யான் அறிவேன். யான் திரு. மறைமலை அடி களுடன் பல்லாவரத்தில் சில நாட்கள் தங்கியிருந்தேன். அப்பொழுது திரு. வி. க. அவர்கள் பல்லாவரத்துக்குப் போந்து திரு. மறைமலையடிகளையும், அடியேனையும் இராயப்பேட்டைக்கு அழைத்துச் சென்றார்கள். பால சுப்பிரமணிய பக்த ஜனசபையில் இருவரும் சொற்பொழி வாற்றினோம். திரு. மறைமலையடிகளை அவர்கள் முதல் முதலாகச் சந்தித்ததும் அப்பொழுதுதான் என்று கூறினார்



கள். அதுமுதல் திரு. வி. க. அவர்கள் அடியேற்கு உடன் பிறப்பாளர் போலவே இருந்து வந்தார்கள்.

சிறுவயதிலேயே அவர்கள் முற்றவத் தொடர்பில் செந்
தமிழிலும், சித்தாந்த சைவத்திலும் வல்லுநராகவே திகழ்ந்
தனர். திருத்தொண்டர் புராணத்துக்குக் குறிப்புரையும்,
அருஞ்சொல் விளக்கமும் எழுதி அப்பொழுதே அச்சிட்டுள்
ளார். அவருடைய பேச்சும், உரைநடையும் தமிழுக்கும்,
சைவத்துக்கும் சிறந்த புதினமாகவுள்ளது. ஒவ்வொரு
வாக்கியமும் நாலைந்து சொற்களோடுமட்டும் கூடிய
தாகவே இருக்கும். Scout என்னும் ஆங்கிலச் சொல்லுக்
குத் தொண்டர்படை எனவும், சற்காரியவாதம் என்னும்
வடசொற்கு உள்ளது சிறத்தல், எனவும் மொழி பெயர்த்
தவர் அவரே. இங்ஙனம் பல சொற்களுள. அன்பர்கள்
யாரேனும் அவைகளை யெல்லாம் திரட்டி வெளியிட்டால்
நன்றாக இருக்கும். அவர்தம் உள்ளத்தில் மிக அழுத்த
மாகக் கொண்டுள்ள சமயம் சைவ சித்தாந்தமே. சைவ
சித்தாந்தம் “இதுவாகும் அதுவல்ல எனும் பிணக்கதின்றி”
நிற்கும் உண்மையைக் கடைப்பிடித்து எல்லாச் சமயங்களி
னிடத்தும் சமரசம் கொண்டு ஒழுகுவார். “சைவத்தின்
சமரசம்” என்னும் தலைப்பில் எங்கள் தூத்துக்குடிச்
சைவ சித்தாந்த சபை ஆண்டு விழாத் தலைமை
யுரையில் விரிவுரை நிகழ்த்தினார். அது புத்தகவடிவிலும்
அச்சிடப் பெற்றுள்ளது. அவரது சொற்பொழிவு,
“கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப
மொழிவதாக” இருக்கும். உரைநடை படிப்போர்க்கு
விளக்கத்தையும் இனிமையையும் தரும். அவர் மிகவும்
அருளுள்ளம் படைத்தவராதலின், உடல் வருந்தத் தொழில்
செய்தும் போதிய நலனடையாதிருந்த தொழிலாளர்களின்
முன்னேற்றம் குறித்தும் தொண்டு செய்தார். மக்களுள்
ஒரு பகுதியினராகிய பெண்களும் ஆடவர்களைப் போல
முன்னேற்ற மடைதல் வேண்டும் என்னும் பேரவாக்
கொண்டவர். பெண்ணின் பெருமை அறியாத சமணர்கள்
பெண்களை மிகவும் இழிவு படுத்தியுள்ளார்களென்றும்
அவர்கள் கருத்தை மாற்றவே திருஞான சம்பந்தப்பெரு
மான் தோன்றியருளினார் என்றும் சொற்பொழிவுகளில்
கூறுவார். திருஞான சம்பந்தப் பெருமான் திருமுறை

ஓதத் தொடங்கிய பொழுதே "தோடுடைய செவியன்" எனப் பெண்மையை வியந்து பாடினார் என மேற்கோள் காட்டுவார். "பெண்ணின் பெருமை" என்ற தொரு நூலும் எழுதியுள்ளார்.

திரு. வி. க. மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்னும் மூன்று பற்றுக்களையும் கடந்த உண்மைத் துறவி எனக் கூறுதல் மிகையாகாது. கைம்மாறு கருதா மாரி போலவே சமயத்தொண்டு, மொழித்தொண்டு, தேயத் தொண்டுகளைச் செய்து வந்தார்.

திரு. வி. க. வை மக்கட் கூட்டத்தில் ஒருவரென அடியேன் கருதவில்லை. "கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை வெள்ளத் தலைவர் மிக" என்றபடி மக்கட்கு நல் வாழ்வை அளிக்கத் தோன்றிய ஒரு அவதார புருஷர் என்றே அடியேன் கொள்ளுகிறேன். அவர்களது பிரிவு எவ்வகையாலும் ஈடு செய்தற்கு உரியதன்று. என்செய்ய லாம்! அவர் பெயரால் ஒரு நிலையான நினைவுச் சின்னம் அமைத்து என்றும் அவரைப் போற்றித் தமிழுலகம் அவருக்கு நன்றி செலுத்துவதாகுக.

—ந. சிவகுருநாத பிள்ளை

*　*　*

## திரு. வி. க. பிறந்தது

திரு. வி. க. என்பது திருவாரூர் விருத்தாசல முதலி யார் – கலியாண சுந்தர முதலியார் என்பதன் சுருக்கமல்ல. திரு. வி. க. என்றாலே தமிழின் புத்துயிர். திரு. வி. க.என் பதே தமிழன் புத்துயிர். எனவே, திரு. வி. க. என்பது ஒரு தமிழ் இயக்கம்; திரு. வி. க. என்பது ஒரு சமய ஸ்தாபனம்.

மதிக்கப்பட வேண்டுமானால் மரணமடைய வேண்டும்! இது தமிழன் தன்மையோ? பாரதியார் தம் வாழ்நாளில் பெற்ற புகழைக் காட்டிலும், பின்னர் கல்கி கிருஷ்ண மூர்த்தி போன்ற பெருமக்களின் நன் முயற்சியால், எட் டையபுரம் பாரதி விழாவினாலும், மண்டபத்தினாலும் பெற்ற புகழைப் பாருங்கள். இன்று நம் அரசாங்கமே



அவர்தம் தேசிய கீதங்களை வெளியிட்டமையை நோக்குங் கள். இதனால் யான் காணும் இன்பக் கனவும் இதுவே.

1. சென்னை அரசாங்கம், மற்றும் தமிழ்நூல் கற் பிக்கும் வெளிநாட்டுக் கல்வி நிலையங்கள் யாவும், தமிழ்ப் பாட புத்தகங்களில் திரு. வி. க வின் உரைநடை நூல்களி லிருந்தும், பாக்களிலிருந்தும் பல பகுதிகளைப் பிரசுரிப் பார்கள். இவற்றைப் படித்துப் படித்து, இளைஞர்கள் இன் புறுவார்கள்; இவற்றைப் படித்தும் பாடியும் பள்ளிப் பெண்கள் பெருமை கொள்வார்கள்.

2. பொதுநல ஊழியர்கள் தம் மேடைப் பிரசங்கங் களுக்குப் பேருதவியாக, திரு. வி. க. நூல்களைப் படிப் பார்கள்; நூல் நிலையங்களிலும் வாங்கி வைப்பார்கள்.

3. தமிழ் கலந்த கிறிஸ்தவக் கோயில்கள் அவரது கிறிஸ்துவின் அருள்வேட்டலை அங்கீகரிக்கும். தமிழன் புடைய பாதிரிமார்கள் தம் போதனையில் கிறிஸ்து மொழிக் குறளை மேற்கோள் காட்டுவார்கள்.

4. 'கேட்டு முட்டு'டைய வீர வைணவரும் திருமால் அருள்வேட்டலை விரும்பி ஓதுவர்.

5. சைவப் பெரியார்களும் முருகன் அருள் வேட்டலை முனைந்து படிப்பர்; திரு. வி. க.வின் பெரிய புராண அரும் பதவுரைக் குறிப்பு, விசேஷக் குறிப்புகள் இவற்றைப் படித்துப் பெருமை கொள்வர்.

6. ஜைனர்கள் தம் மதமே திரு. வி. க. வுக்குச் சம்மதம் என்று 'அருகன் அருகே' காட்டி ஆர்ப்பரிப்பர்.

7. தொழிலாளிகளோ மிகுபொருள் விரும்பா பொதுமை வேண்டும் என்ற வாழ்க்கை வழியையே எதிர் நோக்குவர்.

9. தமிழ் எழுத்தாளர் திரு. வி. க. வின் செஞ்சிறு சொற்களில் கையளாவுவர்.

10. திருமணங்களில் பெண்ணின் பெருமை பேசப் படும். இளமை விருந்தாக 'பெண்ணின் பெருமை' அளிக்கப்படும்.

சுருங்கச் சொன்னால் மனித வாழ்க்கையில், மார்க்ஸிய காந்தியத்தில் தமிழ்த் தென்றல் வீசும். இவ்வாறு பள்ளி

யில் திரு. வி. க. பொதுநலத் தொண்டில் திரு. வி. க.
சமரச சமயத்தில் திரு. வி. க. தொழிலாளியத்தில்
திரு. வி. க. திருமணத்தில் திரு. வி. க. இளமையில்
திரு. வி. க. முதுமை உளறலிலும் திரு. வி. க. படுக்கைப்
பிதற்றலிலும் திரு. வி. க. என்றால் இதுவெறும் மனிதனா?
இல்லை இல்லை; இது மனித உருவத்தில் நடமாடும் நாக
ரிகம்; பேசும் பண்பு; இமைக்கும் அன்பு; சிரிக்கும்
சீர்மை; உபசரிக்கும் உண்மை; தன்னலமற்ற தியாகம்.
இப்படியாகத் திரு. வி. க. சகாப்தம் தோன்றியுள்ளது.
திரு. வி. கவே தமிழ் நாடு. இனி தமிழ் நாடே திரு. வி. க.

—ச. சிவகுமாரன் M. A., அலுவலர், பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி; காரியதரிசி, சைவ சித்தாந்த மகாசமாஜம், சென்னை.

* * *

## திரு. வி. க.

பல்லாண்டு தமிழுக்கு உழைத்து அண்மையில் சிவ
பதம் அடைந்த திரு. வி. க. அவர்களைப் பல ஆண்டுகளுக்கு
முன் தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் ஆண்டு விழா
வில் சிவஞான போதத்தைப் பற்றிச் சொற்பொழிவு செய்
யுங்கால் முதலிற் கண்டதுண்டு. அவருக்குச் சிறந்த
தமிழ் இலக்கிய அறிவும், சைவசித்தாந்த நூற்பயிற்சியும்,
உலகியல் அனுபவமும் உண்டு. படிப்பவர் கேட்பவர்களின்
கருத்தைத் தன் வயப் படுத்தும் எழுத்து நடையும் பேச்சு
வன்மையும் உடையவர்கள். சமய நோக்கத்தில் சமரசக்
கருத்துடையவராயினும், சைவப் பற்றுச் சிறப்பாக இவர்க
ளிடத்தில் இருந்தது. யாரோடும் இகலின்றி அன்போடு
பழகும் குணமுடையவர். தம் கல்வியின் பயனைத் தமிழ்
நாட்டு ஏழைகளாகிய தொழிலாளர் நலங்களைப் பாது
காப்பதில் இடையறாது உழைத்து வந்தார். அதனால் தமி
மூலகம் எய்திய பயன் மிகவாகும். இந்த நூற்றாண்டில்
பலவகையாலும் தமிழ் நாட்டிற்கு அருந்தொண்டு ஆற்
றியவர்களுள் இவர் தலை சிறந்தவர் என்னலாம். தம்
தொண்டின் குறிக்கோள் ஏழை மக்கள் நலங்குறித்ததே
யன்றி தன்னலங் குறித்ததன்று. தனக்கென வாழாப்பிறர்க்
குரியாளர் என்று இவரைக் கூறுவது முற்றிலும் உண்மை



யாகும். நல்லொழுக்கமும் குணங்களும் நிரம்பப் பெற்ற
திரு. வி. க. அவர்கள் தம் அரிய கருத்துக்களைப் புதிய
முறையில் தமிழ் நிலத்தார்க்கு உதவியாகும்படி உரைநடை
யில் பல நூல்கள் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். தம்
வாழ்க்கையில் ஆரவாரம் சிறிதும் இன்றி எளிய முறையில்
ஒழுகிக் காட்டினவர். நாட்டு நலமும் மொழி நலமும் ஆகிய
இவ்விரண்டும் தன் கண்ணெனப் போற்றிப் பேணிவந்த
வர். இத்தகைய அரிய பெரிய குணஞ் செயல்களையுடைய
திரு. வி. க. அவர்கள் மறைந்தது தமிழர்களுக்கு ஈடுசெய்ய
முடியாத குறையேயாகும். என் செயலாம்! இறை
செயலை எண்ணி ஆறுதலடைவதோடு அவர்கள் நல்லுயிர்
அழிவில்லாத இன்பத்தில் ஈடுபட்டு இன்புறுகவென
வேண்டுவோமாக.

—மகாமகோபாத்யாய, பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார்

* * *

## தமிழ் முனிவர் மறைந்தனர்

புகழொடு தோன்றி, புகழொடு வளர்ந்து, புகழொடு
வாழ்ந்த பெரியார் இராயப்பேட்டைத் தமிழ் முனிவர்
திரு. வி. க. அவர்கள். செந்தமிழ் அன்னையும் தொழிலா
ளர் உலகமும் செய்த தவப்பயனாய்த் தோன்றிய திருவாளர்
திரு. வி. க. அவர்கள் தூய இனிய தெள்ளிய தமிழ்
நடையை உலகிற்கு அளித்து எழுத்தாளர்களையும், பேச்
சாளர்களையும் பல்லாயிரக் கணக்கில்உருவாக்கிவிட்டுத் தம்
மூச்சு இருந்தவரையில் இன்தமிழில் பேசியும், எழுதியும்,
வந்த அறிஞர் திரு. வி. க. அவர்கள். தன்னலத்தைச்
சிறிதும் கருதாது, மக்கள் நலன் ஒன்றையே குறியாகக்
கொண்டு பகல் இரவென்றும் பாராது தொடர்ந்து பணி
யாற்றிய தூயவர் திரு. வி. க. அவர்கள். இன்னா செய்
தார்க்கும் இனியவே செய்து தம் கருத்தையும் விடாது
யாவர்க்கும் எடுத்துச் சொல்லி, "எல்லோரும் ஓர் குலம்,
எல்லோரும் ஓர் இனம்" என்ற கொள்கையை மக்கள்
நடைமுறையில் கொண்டு ஒழுகத் தலைப்பட்டதைக் கண்டு
களித்த பெரியார் திரு. வி. க. அவர்கள். இயற்கையோ
டியைந்த வாழ்வு யாவரும் வாழவேண்டுமென்று வற்
புறுத்தி இயற்கையன்னையின் எழிலை யாவருக்கும் அறி

வுறுத்தி இயற்கையின் தெய்வத் தன்மையை முற்றிலுமுணர்ந்து மகிழ்ந்தவர் திரு. வி. க. அவர்கள். நாட்டின் கல்வி நிலையங்கள், பொதுக் கழகங்கள், மாநாடுகள் முதலியவற்றிற்குத் தலைமை தாங்கி, செந்தமிழில் சிறந்த கருத்துக்களை எடுத்துச் சொல்லித் தமிழ்த் தென்றல் வீசச் செய்த பெருமகனார் திரு. வி. க. அவர்கள். அவரை திருவிலாத நாம் பிரிந்து நிற்கின்றோம்; வருந்துகின்றோம். அவரது ஆருயிர் இறைவன் திருவடியில் அமைதி பெறுவதாக. அப்பெரியாரின் நினைவு தமிழ் நாட்டில் நிலைத்திருக்கத் தக்கதோர் நினைவுச் சின்னமாக மணிமண்டபம் ஒன்று எடுப்போம். அத்தொண்டில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நாட்டுமக்கள் ஆதரவு நிரம்பக் கிடைப்பதாக!

—வா. தி. மாசிலாமணி,

இந்துமத பாடசாலை, வாலாஜாபாத்

* * *

தமிழ் மாணிக்கமான திரு. வி. கலியாணசுந்தரனார் தமிழ் உள்ளமட்டும் தமிழருக்கு உள்ளம் உள்ளமட்டும் வாழ்வார். அவருக்கு நாட்டும் மண்டபம் தமிழ்த்தாய்க்கு நாட்டும் நன்றி மாளிகையாகும். திரு. வி. கலியாண மண்டபம், சுந்தரேசப் பெருமாள் அருளாலும், தமிழர் அன்பாலும் திருவோங்கி நிலவுக!

இன்பமே சூழ்க! எல்லாரும் வாழ்க! ஓம் சுத்த சக்தி ஓம் சிவம்.

—சுத்தானந்த பாரதி

* * *

"தமிழர்களுக்கும் தமிழ் நாட்டிற்கும் காலஞ் சென்ற திரு. வி. கலியாணசுந்தர முதலியார் கலங்கரை விளக்கு போலிருந்தார். திரு. வி. க. வின் மறைவு பொதுவாகத் தமிழ் நாட்டிற்கும், முக்கியமாகத் தொழிலாளருக்கும் ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும். கண்ணியம், நேர்மை, ஆழ்ந்த அறிவு, விடாமுயற்சி, கட்டுப்பாடு ஆகியவற்றிற்குத் திரு. வி. க. உறைவிடமாக இருந்தார். அவருடைய இந்தக் குணங்கள் நம்மிடம் என்றென்றும் சிரஞ்சீவியாக வாழ வேண்டும்.

—G. D. நாயுடு



நம்மன்பிற்கினிய அருமைத் திரு. வி. க. ஐயா அவர்களின் பெரும் பிரிவை எண்ணி எண்ணி உருகுகின்றேன். அவரைப் போன்ற ஆன்றோரை என் பிறவியில் இனி யான் காணமாட்டேன். என் அன்புத் தாயான அவரை இழந்தேன். சென்னை எனக்குப் பாழாய்த் தோன்றுகிறது.

—வித்வான் மறை. திருநாவுக்கரசு

* * *

சமயம், சைவம், சமரசம், சீர்திருத்தம், பெண்மக்கள் உயர்வு, தொழிலாளர் முன்னேற்றம் ஆகிய ஒவ்வொரு துறையிலும் தன்னலங் கருதாது உழைத்த சிறந்த தமிழர் நம் திரு. வி. க. அவர்கள். இன்று சில குடும்பங்கள் அவர்கள் பணியாற்றிய ஒவ்வொரு துறையிலும் ஈடுபட்டு உழைத்து வருகின்றன என்றால் அப்பெருமை திரு. வி. க. அவர்களையே சாரும். எங்கள் குடும்பத்துடன் அவர்கள் நெருங்கிப் பழகினார்கள். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பழந்தமிழ் வாக்கியம் திரு. வி. க. வின் வாழ்க்கையில் நாமனைவரும் நேரே கண்டதொரு உண்மை. அவர்கள் மறைந்ததாகக் கருதவேண்டியதே இல்லை. ஏனெனில் அவர்கள் புத்தகத்தைப் படிக்கும் போது அவர்களுடன் பேசுவது போலவே இருக்கின்றதை நாம் உணர்கின்றோமல்லவா!

—பு. ர. சுவாமிநாதன் - பு. ர. சு. ராஜேஸ்வரி

* * *

## திரு. வி. க. வின் இறுதிப்பேறு

திரு. வி. க. வோடு நாற்பத்தைந்தாண்டுகளுக்குமேல் நெருங்கிப்பழகும் நற்பேறு பெற்றவன் நான். அவருடைய ஆப்தநண்பர்களுள், அவரோடு ஒத்த கலையும் ஒத்த பண்புமுடைய உயிர்த்தோழர் திருவாளர். ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் ஆவர். 'கல்கி' கூட பிள்ளையவர்களை திரு. வி. க. வோடு "ஈருடலும் ஓருயிரும்" என்று சொல்லக் கூடிய அளவுக்கு நட்புரிமை பூண்டிருந்தவர் என்கிறார்.

திரு. வி. க. எப்பாரும் எப்பதமும் எங்கணும் தான் சென்றாலும் சிவன் பாதம் மறவாத சீலர். அன்றாடம் மானசமாகவேனும் சிவபூஜை செய்யும் சைவச்செல்வர். அவரது

ஆன்மார்த்த வழிபாட்டு நூல் திருவாசகம். இத்தகைய சிலர் தம் வாழ்க்கையின் பயனைக் தம் இறுதிநேரத்திலும் திருவாசகம் தேவாரம் ஓதக் கேட்டுக்கொண்டே, தன் காதில் திரு. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் பஞ்சாட்சர மந்திரம் ஓதச் செவிசாய்த்துக்கொண்டே இறைவனோடு இரண்டறக் கலந்தாரென்றால், இது திரு. வி. க. வின் இறுதிப் பேறல்லாது வேறு யாது?

—வே. தியாகராய முதலியார்,
உபதலைவர், ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை,
இராயப்பேட்டை, சென்னை.

* * *

Speech delivered by Sri Kamalakannan, Contractor, Councillor, Corporation of Madras & Life Member of Sri Balasubramanya Bakthajana Sabah, Royapettah, Madras, at the Council Meeting of the Corporation of Madras on 22nd September 53.

Mr. Worshipful Mayor, I also associate with the Hon'ble Members and the Leader of the Party in expressing my profound sorrow on the passing away of a great leader Thiru. V. Kalyanasundara Mudaliar. He was an eminent scholar in Tamil, a great writer and a fluent speaker. Sir, I had occasion to associate with him since I was a young boy, as he and myself were living in the same locality. He was very simple in his habits and a sympathiser particularly with the labourers. He not only raised the self respect of the labourers but also evinced great interest in raising the wages of these labourers. He wrote about 50 books in Tamil, in simple prose and verse, of varied interest. He was very religious and was a follower of Sri Ramalinga Swamigal. Among those books which are popular are :—1. பெண்ணின் பெருமை, 2. மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், 3. முருகன் அல்லது அழகு. He was responsible for establishing a Labour Union for the first time in South India in the year 1918. He was also President of the Tamil Nadu Congress in the year 1926. In conclusion, I once again express my sorrow on the demise of the great leader.



---

# திரு. வி. க. இரங்கற் பாக்கள்

அருவியெனப் பொதிசொல்லும் அருந்தமிழின் பொருணலன்கள்
திருவொளிர வரைதிறனும் சிவமளிக்கும் திருமுகமும்
பெருவிறலும் அருந்துறவும் பெண்மைநலம் ஓம்புதலும்
திரு.வி.க.நின் பாற்கண்டு திசைஎட்டும் புகழ்ந்திடுமே. 1

நிலைபெறுநல் லுடலமைக்க நிறைமலரோன் நினைந்திலனே!
கலைவலநின் றனைக்காக்கக் கார்வண்ணன் கருதிலனே!
தலைவனென அறிந்துமெம தருமனுனைச் சார்ந்தனனே!
அலைகடல்சூ ழுலகிலுன்போ லாரையுமே காண்கிலமே! 2

வித்தகநின் புகழுடம்பு வீழ்கினுங்கொள் புகழுடம்பு
இத்தரையி னின்றுலகோர்க் கின்பநலன் செய்திடலால்
உய்த்ததுயர் சிறிதகன்று உளத்தமைதி யென்கின்றோம்
சித்தனெனப் பத்தனெனச் சிறந்தொளிரும் பெருமானே! 3

—தூத்துக்குடி ந. சிவகுருநாத பிள்ளை.

* * *

மன்னியசென் னையைவிளக்கு மணிவிளக்காய்த், தமிழ்க்கலையின் வரம்புகண்ட, முன்னவரின் முன்னவனாய் முற்றியவின் மொழித்திறத்தின்மூத்துளானாய்,என்னருங்கண் டுளம்வியக்கு மியலறிவின் நிலைக்களனாய் இனியவாய, பன்னலனும் பூத்தவெழிற் கலியாண சுந்தரப்பேர் படைத்த மேலோய்!

தக்கவர்பாற் பயின்றகலை தன்பயனு யிறையன்பில் தழைத்தாய் நாளும், மக்களுக்கா வனநலனே வழங்கியசொற் பொழிவின்வழி வரச்செய்வித்தாய், எக்குறையுங் கருதாம லெளிமையுறு வாழ்க்கையையே இனிதுவேட்டாய், மிக்கபுல மையினோரும் வியந்தேற்கு நூல்பலவும் விழைவில் தந்தாய்.

பிறந்தறிவு பெறுவார்தம் பெருங்கடன்றான் பிறர்க் கெனவாழ் பெற்றியென்னுத், துறந்தனைதன் னலவாழ்வைத் தொழிலாளர் வாழ்வுயருந் துறைநன் காய்ந்து, சிறந்தநெறித் தொண்டியற்றி உலகினுக்கு மாங்கதனைத் தெளிவித்தாயால், அறந்திகழ்நெஞ் சகத்தளவா அருண்பவிந்த உலகுபுகழ் அண்ணல் ! அண்ணல் ! 3

விதந்தருசூழ்ச் சியின்வல்ல வெள்ளையராட் சியை யொருவி விழைந்துநாளும், சுதந்தரவாழ்க் கையினுலகைத் தொக்குறமுன் முயன்றார்தந் தொகையோன் ஆயும், மதந் தனையும் குலந்தனையும் வாய்மையென மேல்கீழா மதிப்போர்க் கெல்லாம், இதந்தருமின் மொழியதனால் இறையொருவன் குலமுமொன்றே எனத் தெளித்தும். 4

மற்றுமெனைப் பலமுகத்து மக்களுக்கா வனகருதி வாழ்நாளெல்லாம், உற்றுளதொண் டினையேநன் குவந் தியற்றி வைகியநீ உரியவெம்மை, இற்றைமறந் தேகினையால் எனினுமுனையா மறந்தீண் டிருத்தற் கொல்லேம், கற்றை நெடுஞ் சடையான்றன் கழனிழற்க ணுறுநீயும் களித்துவாழி.

—ஆர்க்காடு ஸ்ரீ கண்ணன் திருச்சபை சார்பில்
வல்லம்-மகாவித்துவான்-வைத்தியலிங்கம் பிள்ளை.

* * *

அன்பின துருவை யான்ற அறிவியற் றெளிவை மக்கள்
இன்புறு நெறியைக்காட்டும் இணையிலா விளக்கை யென்றும்
துன்புறலறியா நெஞ்சத் தொண்டரைத் திரு.வி.க.வை
என்புறும் வடிவில் காணேம் இனியொளி யுருவமானார்.



தமிழின துருவை யாரும் தமிழ்ச்சுவை யறியப் பேசும்
அமிழ்துறு சொற்பெருக்கை அகவொளி விரியப் பெற்ற
தமிழ்ப்பெரும் புலவரேற்றைத் தகுதிசால் திரு.வி.க.வை
அமைதிசேர் உடம்பிற்காணேம் அவரொளி யுருவமானார். 2

சைவசித் தாந்த வுண்மை தரணியில் சிறக்கச் செய்த
சைவநற் றொண்டர்தம்மைத் தரும்பிற சமயமெல்லாம்
சைவமே போலப் போற்றும் சமரச திரு.வி.க.வை
நைவுறு முடம்பிற் காணேம் நந்தொளி யுருவ மானார். 3

காந்தியார் நெறியின் பற்றும் காங்கிரஸ் தொண்டர் தம்மை
காந்திய ராக வாழ்ந்த களங்கமில் லொழுக்கத் தாரைச்
சாந்தனை தொண்டே செய்த சளைத்தலில் திரு.வி.க.வைச்
சாந்தனை யுடம்பிற் காணேம் தகையொளி யுருவ மானார். 4

இயற்கை இயற்கை யெனமொழிவார் இறையே இயற்கை எனுங்கருத்தால், இயற்கை யின்பம் எனமொழிந் தார் இயற்கை யெழில்கண் டின்புற்றே, இயற்கை நமக்குத் தருமறிவே இணையில் ஞானம் எனமொழிவார், இயற்கை கலந்தின் றின்புற்றார் இதுவு முலக வியற்கையதே. 5

பெண்ணினத்தைப் பழித்துரைத்தல் பெருமையெனத் துறவென்னப் பேசும்நாட்டில், பெண்ணினமே தெய்வ மெனப் பெண்பெருமை யுலகறியப் பேசிநாளும், பெண் ணினத்தை யுயர்த்திட்ட பெண்பெருமை வரைந்திட்ட பெருமையாளர், பெண்ணசையை யுவர்த்திட்ட பெருந் துறவி போராண்மைப் பெரியா ரெங்கே? 6

தம்மதமே சிறந்ததெனப் பிறர்மதத்தைப் பழித்துரைக் கும் தமிழ நாட்டில், தம்மதம்போல் பிறர்மதமும் சிறந்தனவே யெனக்காட்டச் சால்பு மிக்க, தம்மதத்துச் சிவன் முருகன் அருள்வேட்டல் செய்ததுபோல் தக்கோர் போற்றும், எம் மதத்துக் கடவுளர்க்கும் அருள்வேட்டல் பலமொழிந்த எழிலர் எங்கே? 7

மின்றந்த சடையண்ணல் அடிமறவாச் செம்மைமன மேலோ ரெங்கே! தென்றந்த நன்மொழியே யார்மாட்டும்

விரித்துரைக்கும் தெய்வமெங்கே? பொன்றந்த பொருள்
போகம் அறத்துறந்த பேராண்மைப் புனிதரெங்கே? என்
றென்றே நினைந்நினைந்து தளர்ந்து மொழிதடுமாறி இரங்கா
நின்றேம். 8

—செ. வேங்கடராமன், தமிழ் விரிவுரையாளர்,
S. V. O. கல்லூரி, திருப்பதி.

* * *

அந்தோஅந் தோஎங்கள் அரியபெருந் தமிழ்த்தலைவ
அறிஞர் ஏறே, தந்தாய் நம் தாய்தமிழில் அருங்கலைக ளத்
தனையும் தகவி ளுய்ந்தே, எந்தாய்நீ தமிழமுதம் தருஞ்
சுவைக ளளவிலவாய் இனிதே கூட்டித், தந்தாயே திரு
வாரூர் கலியாண சுந்தரனே தமிழின் குன்றே. 1

தேனடுத்த கொன்றையினன் திருமலரைச் சிந்திக்கும்
திருவே உம்மை, யானடுத்து வணங்குகின்ற போதெல்லாம்
தமிழமுதம் அள்ளி அள்ளி, வானடுத்த ஆனந்த மழையெனவே
வழங்கியதன் வளமை சேர்த்துத், தேனடுத்த முப்பழத்தின்
இரசம்போல் ஊட்டுவையே தெவிட்டா அன்பே! 2

வாழ்வனைத்தும் பொய்யெனவே வழங்கிவந்த வேதாந்த
வாதி சுட்கும், தாழ்வெனவே சமதடிமை வாழ்வென்று
சொற்பொழிவால் தகவின் ஊட்டி, எழ்புவியும் வரவேற்கும்
பன்னூலை அளித்திட்டாய் எங்குச் சென்றாய், ஊழ்வினையின்
தகையறிந்தோம் கலியாண சுந்தரனே உம்பர் மேலோய்! 3

—பண்டித L. S. சுப்பிரமணியம்.

* * *

அன்புடைய கலியாண சுந்தரப்பேர் ஐயாநின் அரிய
வாக்கும், இன்புடைய தமிழ்நடையின் எழில்தனையும் இனி
நாங்கள் எங்கன் காண்போம், வன்புடனே தொழிலாளர்
வாழ்வுபெற உழைத்திட்ட வள்ளால் நீயும், பொன்புரையும்
வாய்திறந்து போங்தொருசொல் புகலாயோ புலவரேறே. 1



செந்தமிழ்நாட் டிடைமீண்டும் செனித்திடுவேன்
அஞ்சலீர் எனவே செப்பும், அந்தமொழி தமைக்கேட்டே
அமைதிபெற்றே மாயிடினும் அதுபோல் மீளல், எந்தநா
ளென நினைத்தே எங்கிடுமெம் மிதயமெலா மின்பமெய்த,
வந்துசில மொழிபுகன்றே மகிழ்விக்க வொண்ணுதோ
வள்ளால் வள்ளால்! 2

கண்போல உரைவரைந்த பெரியபுரா ணத்தெழிலைக்
கழறு வேமோ! பெண்குலத்துக் குயர்வுதந்த நூல்யாத்த
பெருமைதனைப் பேசு வேமோ! திண்மனித வாழ்க்கையுடன்
காந்தியையும் ஒப்பிடலைச் செப்பு வேமோ! பண்புறுநின்
செயல்களிலே எதனுலா றுதலடைவோம் பகருவாயே! 3

என்றனது கடன்பணிசெய் திருப்பதுவே யெனப்
பலகால் இயம்பா நின்ற, நின்றனது செயல்காட்ட விசய
புரட் டாசிமுன்னுள் நினைந்து தானே, மன்றினிலே நடம்
புரியும் மாதேவன் கழலடிக்கீழ் மன்னி நின்றாய், உன்றனது
ஆன்மாவும் சாந்திபெற்றே யாங்குமகிழ் வுறுக மாதோ. 4

—வடிவேல் முதலியார்,
தமிழ்ப் பண்டிதர், மேல்வீதி, திருக்கோவலூர்.

* * *

திங்கள் திகழும் செம்பொருள் சிவனும்,
மங்கை மகிழும் மார்பகக் கண்ணனும்,
பங்கயச் செல்வன் பால்வெண் அயனும்,
தங்கள் தெய்வம் என்றனர் தொல்லோர்.
இத்தகு தெய்வம் எல்லாம் இருந்தும்,
முத்தி யளிக்கும் முதல்வன் முக்கண்
வித்தகன் வினைதனை வேருடன் களைந்து
சித்தர் போற்றும் சிறந்தோன் ஆவான்.
செம்பொருள் சிவன்தான் பிறவான் இறவான்,
சேர்ந்தோர் எவர்க்கும் செந்நெறி யருள்வான்,
சோதித் தறிந்தபின் சோகம் தவிர்ப்பான்
என்றவர் மரபினில் பண்புடன் பிறந்தான்.

செந்தமிழ்த் தாயவள் செல்வப் புதல்வன் ;
பைந்தமிழ்ப் புலவன் ; பாடலில் வல்லவன் ;
சிந்தைக் கினியவன் ; செயலினில் விழுமியோன் ;
முந்திய மரபினில் முற்றிலும் நிற்பவன் ;
கற்றலில் சிறந்தவன் கண்ணதை இழந்தவன் ;
பெற்றவர் எனத்தகும் பெற்றியில் நிறைந்தவன் ;
செற்றவர் திறத்திலும் முற்றிலும் எளியவன் ;
உற்றவர் துயர்தனை சத்தியில் களைபவன் ;
தமிழகத் தலைவன் ; தனிக்குணம் படைத்தவன் ;
அமிழ்திலும் இனிதெனும் கவிகளைப் புனைந்தவன் ;
இதழ்விரி மலரென இன்முக முடையவன் ;
புகழ்தரு சொல்லொடு புவியினில் வாழ்ந்தவன் ;
பெண்ணின் பெருமை விண்ணுறப் புகன்றவன் ;
கண்ணெனப் பலரும் கருதிடும் பெரியவன் ;
புண்ணியம் இதுவெனப் பொதுநெறி உரைத்தவன் ;
திண்ணிய மனத்தொடும் தெளிவொடும் ஏகினன்.
விண்ணவர் கொளத்தகும் விருந்தினன் ஆயினன்.

—திருமதி-இராஜரத்தினம் அம்மையார், M.A., L.T., M.E.S.
தமிழ் விரிவுரையாளர்,
லேடி வில்லிங்டன் ஆசிரியைப் பயிற்சிக் கல்லூரி, சென்னை

* * *

## இனி எவரோ ?

எல்லார்க்கும் பொதுமையராய் இலங்குதிரு வள்ளுவர்போல்
சொல்லார்க்கும் தமிழ்ப்பெரியார் கலியாண சுந்தரனார்
பல்லார்க்கும் உரியரெனப் பலகட்சி களும்போற்ற
நல்லார்க்குள் நல்லாராய் வாழ்ந்திருந்தார் நமைப்பிரிந்தார்! 1

தொழிலாளர் பெருந்தலைவர், தூய்மைமிகு காந்திய
வழியாளர், சமரசசன் மார்க்கநெறித் திருத்தொண்டர்,
எழிலாரும் பேச்சாளர், எழுத்தாளர், இதழாளர்,
முழுதாகத் தம்வாழ்வை மன்பதைக்கே முற்றுவித்தார். 2



எழுத்தினிலும் பேச்சினிலும் இனியதொரு புதியநடை
அழுத்தமிக அழகுமிக ஆற்றல்மிக அருமைமிகப்
பழுத்துயர்தம் பெரும்புலமைப் பயனுகப் படைத்தளித்துச்
செழித்துயரத் தமிழ்நாட்டைச் செய்வித்தார் திரு.வி.க.. 3

தேசீய கவிஞருயர் பாரதியார், சிதம்பரனார்,
மாசில்அன்னை வசந்தையார், வ.வே.சு. ஐயர், மற்றும்
ஆசிரியர் கதிரைவேற் பிள்ளை,அருட் குமரகுரு
தாசர்முதற் சான்றோர்கள் தகப்புகழ்வோர் திரு.வி.க. ! 4

தென்றமிழ்நாட் டுக்காந்தி, சிறந்தஇரா யப்பேட்டை
மன்பெருமா மறைமுனிவர், மணவழகர், தமிழ்த்தந்தை,
நன்றெளிய சாதுநல்லார், நவசக்தி ஆசிரியர்
என்றெல்லாம் பெயர்பெற்ற திரு.வி.க.! எங்ககன்றீர் ? 5

எனைப்பலவாம் சூழல்களில் எத்துணையோ மக்களொடு
நினைப்பதற்கும் அரியவகை நெருங்கிமிகப் பழகினின்றும்,
முனைத்துமிக இறையுணர்வு முதிர்ந்தொளிரத் தம்வாழ்க்கை 6
அனைத்தினுமே கடைப்பிடித்த அருஞ்செய்தி பெருஞ்சிறப்பாம்.

அரசியலே இந்நாளில் ஆற்றல்மிக வளர்ந்துவரும்
விரைசுமிக என்றாலும், மிகஅதன்கண் அறிவாற்றல்
பரசுமுயர் அனுபவம்நற் பண்பாடென் றிவற்றிலெலாம்
உரைசெயின்நம் திரு.வி.க. ஒப்ப,இனி உளர்யாரோ ? 7

அறங்கரையும் நாவினுயர் அந்தணராம் பெருந்தகையார் !
சிறந்துயர்ந்த பேரறிஞர் ! சிவநெறிநற் றிருவாளர் !
மறந்தெனினும் தமக்கெனத்தாம் வாழாத பிறர்க்குரியார் !
நிறைந்துயர்சீர்த் திரு.வி.க. நிகராவார் இனிஎவரோ ? 8

—புலவர் - முருகவேள் B.O.L.

* * *

## மறைந்தாரோ அவர் ?

" மறைந்தாரோ மண்மீது வாழ்க்கை கொடிதென்
றறைந்தாரோ, இல்லையே, ஆனால்—மறந்தேனும்
விண்மீது நல்வாழ்வு வேட்டுத் துறந்தாரோ,
நுண்மீன் அகத்தை அழைத்து! 1

வாழ்க்கையிலே பன்மைவளம் கண்டார் மக்கள்நிலை
காக்கையிலே வாழ்வில் கருக்கண்டார்—கோக்கையிலே
பாவில் கருத்தமைத்துப் பல்லுயிரும் செம்மையுற
வழி மொழியமைத்தார் இங்கு. 2

பெண்மை நலமுய்யப் பெருமையில் வழியும்
உண்மைப் பயனுய்ய உற்றுதவி—நன்மை
புலனுய்யப் பண்ணூற்கள் புத்துரையில் ஏற்றி
நலனுய்ய நின்றார் நயந்து. 3

வறுமை கொடிதன்று வாழ்க்கையில் அஃதும்
நறுமை அடைவிக்கும் நன்கு—பொறுமை
நிலவுவதால் எவ்வெந் நிகழ்ச்சியினும் வெற்றி
உலவுவதாய் வாழ்ந்தார் உவந்து. 4

இத்தகைய பண்பர் இகம்விட்டு வேறுலகம்
எத்தகைய பண்பிற்கும் ஏகுவரோ—முத்தமிழில்
ஆழ்ந்த கருத்துடையார் அந்நாள்போல் எந்நாளும்
வாழ்ந்திலை தருவர் வந்து. " 5

—கோவைகிழார்

---

# அனுபந்தம்

## நகராண்மைக் கழகங்களும், கிராமப் பஞ்சாயத்துக்களும்

1. நகராண்மைக் கழகம், சென்னை
2. ,, திருவாரூர்
3. ,, வாணியம்பாடி
4. ,, திண்டுக்கல்
5. ,, செங்கோட்டை
6. ,, விழுப்புரம்
7. பஞ்சாயத்துச் சபை, குனூர்
8. ,, சூரமங்கலம்
9. ,, ஆதிகுடி (திருச்சி)
10. ,, வத்தலகுண்டு

* * *

## கல்வி நிலையங்கள்

1. தமிழ் மன்றம், பொறியியற் கல்லூரி, அனந்தபூர்.
2. தமிழ்ச் சங்கம், பெங்களூர்.
3. தமிழ்ச் சங்கம், சித்தூர்க் கல்லூரி, கொச்சி.
4. தமிழ்க் கழகம், பொறியியற் கல்லூரி, சென்னை.
5. தமிழ்ப் பயிற்சி மன்றம், Dr. அழகப்ப செட்டியார் பயிற்சிக் கல்லூரி, காரைக்குடி.
6. தமிழாசிரியர் பயிற்சி வகுப்பு ஆசிரியர் கல்லூரி, சைதாப்பேட்டை, சென்னை.

6-a. ஆதாரக் கல்வி ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, திருச்சிற்றம்பலம், தஞ்சை.

7. Dr. குருசாமி முதலியார், தொ. து. வே. உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் சங்கம், சென்னை.

8. வள்ளுவர் இலக்கிய மன்றம், B. H. S. ஆரணி, செங்கற்பட்டு.
9. R. B. C. C. உயர்நிலைப் பள்ளி, திருவள்ளூர்.
10. தமிழரசுக் கழகம், ,,
11. வ.ஆ.மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளி, மின்னல்.
12. ,, மாணவர் இலக்கிய மன்றம், காட்டுப்பாடி,
13. இந்து உயர்நிலைப்பள்ளி, ஆம்பூர்.
14. நகராண்மை ,, குடியேற்றம்
15. ஆரம்ப ஆசிரியர் சங்கம், பனப்பாக்கம்.
16. மாணவர் இலக்கியச் சங்கம், B. H. E. School, ஊசூர்.
17. டேனிஷ் மிஷன், உயர்நிலைப்பள்ளி, திருவண்ணமலை.
18. ஆசிரியர் சங்கம், தெள்ளாறு.
19. திருவள்ளுவர் தமிழ் மாணவர் சங்கம், சித்தூர்.
20. முதியோர் கல்விக் கழகம், வெள்ளிமேடுபேட்டை.
21. தெ. ஆ. மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளி, திருக்கோவலூர்.
22. திருவள்ளுவர் தமிழ் மாணவர் கழகம், திருவையாறு.
23. தேசிய உயர்நிலைப்பள்ளி, நாகூர்.
24. மாணவர் நூல் நிலையம், வெள்ளலூர்.
25. தமிழ் மாணவர்கள், மன்னார்குடி.
26. ஆசிரியர் சங்கம், தஞ்சை மாவட்டக் கழக உயர் நிலைப்பள்ளி, கொரடாச்சேரி.
27. தஞ்சை மாவட்டக் கழகக் நடுநிலைப்பள்ளி மாணவர் மன்றம், பூவாளூர்.
28. பி. கே. என், உயர்நிலைப்பள்ளி, திருமங்கலம்.
29. மாணவர் நன்னெறிக் கழகம், மேலைச்சிவபுரி.
30. கோவை. மா. க. உயர்நிலைப்பள்ளி, கவுந்தப்பாடி.
31. அரசியலார் உயர்நிலைப்பள்ளி, மேட்டூர்.



32. யூனியன் உயர்நிலைப்பள்ளி, கோயம்புத்தூர்.
33. Y. M. I. A. C. U. M. S. Hostel Buildings, கோயமுத்தூர்.
34. கோவை, மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளி, திருச்செங்கோடு.
35. தமிழ்ச் சங்கம், அரசினர் விக்டோரியா கல்லூரி, பாலக்காடு.

* * *

## பல்வேறு சங்கங்கள்

1. பாரதி தமிழ்ச் சங்கம், கல்கத்தா.
2. தமிழ் வாசகர்கள் குழு, நாக்பூர்.
3. மகாமகோபாத்யாய Dr. வி. சாமிநாத ஐயர் நூல் நிருவாகக் குழு, சென்னை.
4. கூட்டுறவுப் பால்பண்ணைச் சங்கம், சென்னை.
5. The Madras Municipal and General Worker's Union சென்னை.
6. Madras R.M.S Class IV Officials Benefit fund.
7. மாணவர் மன்றம், சென்னை.
8. மறைமலையடிகள் நூல் நிலையம், பெரம்பூர்.
9. திராவிட முன்னேற்றக் கழகம், செம்பியம்.
10. சமதர்ம இளைஞர் கழகம், ஜாம்பஜார், சென்னை.
11. சென்னைத் திருவள்ளுவர் கழகம், புரசை.
12. திருவள்ளுவர் கழகம், தியாகராயநகர்.
13. படேல் இளைஞர் காங்கிரஸ், திருவல்லிக்கேணி.
14. பொதுநல ஊழியர் மன்றம். ,,
15. பாரதியார் வாலிபர் கழகம், சென்னை-1.

16. Township Committee, Villivakkam
17. தமிழ் இளைஞர் சங்கம், திருவள்ளூர்.
18. வார வழிபாட்டுக் கழகம், வேலூர்.
19. முற்போக்கு இளமெழுத்தாளர் கழக வளர்ச்சி மன்றம், சுடரொளி கமிட்டி, காவேரிப்பாக்கம்.
20. சமரச சன்மார்க்க சபை, வெட்டுவாணம்.
21. மறுமலர்ச்சி மன்றம், ஒடுக்கத்தூர்.
22. நண்பர் ஒற்றுமைக் கழகம், திருவண்ணாமலை.
23. தமிழர் நலஉரிமைக் கழகம், சித்தூர்.
24. ஜவஹர் வாலிபர் சங்கம், வடசிறுவேலூர். கோ. கி. சங்கம், சேக்கிழார் செந்தமிழ்க் கழகம், வெள்ளிமேடுபேட்டை.
25. முஸ்லிம் இளைஞர் மன்றம், பரங்கிப்பேட்டை.
26. திருவள்ளுவர் கழகம், வடசிறுவேலூர்.
27. திருவள்ளுவர் செந்தமிழ்க் கழகம், திருச்சிராப்பள்ளி.
27-a. மறைமலை மன்றம், புதுக்கோட்டை.
28. திருவள்ளுவர் கழகம், கறம்பக்குடி, திருச்சி.
29. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மதுரை நகர் கமிட்டி.
30. தமிழியக்கச் சொற்பயிற்சி மன்றத்தார், திருமங்கலம்.
31. Mappilies Majestic Club, Sattur.
32. வள்ளுவர் வாசகசாலை, போடிநாயக்கம்பட்டி.
33. சைவ சபை, பாளையங்கோட்டை.
34. Salem Co-operative Central Bank.
35. நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், பாப்பாரப்பட்டி.
36. சக்தி நிலையம், புதுச்சேரி.
37. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, கோவை மாவட்டக் கமிட்டி.



38. கோயமுத்தூர் டீ & காப்பி தொழிலாளர் சங்கம்.
39. பாண்டியன் பதிப்பகம், கோவை.
40. தேவி கலாமன்றம், ஒண்டிப்புதூர்.
41. பாரதி விழா, பொதுக்கூட்டம், பொள்ளாச்சி.
42. சிற்றூர் வானொலிச் சங்கம், பொத்தனூர், சேலம்.
43. தேசபந்து சங்கம், பாப்பாரப்பட்டி.
44. பாரதியார் பளஞ்சிகர் வாலிபர்மன்றம், குன்னூர்.
45. சச்சிதானந்த சபை, தூத்துக்குடி.

* * *

## மாதர் சங்கங்கள்

1. பெத்துநாய்க்கன் பேட்டைத் தாய்மார் சங்கம், சென்னை.
2. பாகம்பிரியாள் மாதர் கழகம், தூத்துக்குடி.
3. திலகவதியார் கழகம், ,,
4. ஆண்டாள் தெய்வநெறிக் கழகம் ,,

* * *

## தனி முறையில் வந்த அனுதாபத் தந்திகள், கடிதங்கள்.

1. மேன்மை தங்கிய கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்கள், 2. குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத் தலைவர், 3. துறையூர் மௌனசுவாமிகள், 4. கோவை திவான்பகதூர் C. S. இரத்தினசபாபதி முதலியாரவர்கள், C.B.E.5. மதுரை-திரு. N.M.R. சுப்பராமன் அவர்கள், 6. சிரம்பான்-திரு. அ. பழனியப்பன் அவர்கள், 7. கரந்தைக் கவியரசு. திரு. வேங்கடாசலம் பிள்ளையவர்கள், 8. திரு. கிருஷ்ணசாமி ஐயரவர்கள், 9. வாணியம்பாடி வே.ச. விசுவநாத முதலியாரவர்கள், 10. திருநகர்-திருவாசகமணி அவர்கள், 11. அமராவதிபுதூர்-

மகளிர் இல்லம். திரு. சொ. முருகப்பா அவர்கள், 12. கீழ்க்கரை K. S. சையத் அலியார் அவர்கள், 13. அண்ணாமலை நகர் – திரு. சா. இராமலிங்க முதலியாரவர்கள், 14. மேல்சாணுன்குப்பம் – ந. ராஜகோபால் முதலியாரவர்கள், 15. காஞ்சிபுரம் டாக்டர் – பி. சிற்சபையவர்கள், 16. திருமதிகள் – கோவை. ஞானப் பூங்கோதை அம்மையார், 17. ஆழ்வார் - ராமாநுஜ நாயகி அம்மையார், 18. நாகரசம்பட்டி – N. V. விசாலாக்ஷி அம்மையார். இன்னும் பல அன்பர்கள் அநுதாபத் தந்திகளும், கடிதங்களும் அனுப்பியுள்ளனர்.

இப் பெருமக்கட்கும், சங்கங்கள் வாயிலாகவும், சிறப்புக் கூட்டங்களின் வாயிலாகவும், பத்திரிகைகளின் வாயிலாகவும், திரு. வி க. அவர்களிடம் தாம் வைத்திருந்த பெருமதிப்பையும், அன்பையும், புலப்படுத்திய மேன்மைசால் அன்பர்கள் அனைவர்க்கும், திரு. வி. க. வின் உறவினரும் நண்பர்களும் தங்கள் மனமார்ந்த நன்றியை இம்மலரின் மூலமாகப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

குறிப்பு : மேலே தரப்பட்டுள்ள பட்டியல்களில் காட்டப்பட்டவை திரு. வி. க. நினைவு மலர் வெளியீட்டாளரிடம் சேர்க்கப்பட்ட செய்திகளை மட்டும் கொண்டு தொகுக்கப் பெற்றவையாகும்.

இவைகளே யன்றி இன்னும் பல சங்கங்கள் பல பத்திரிகைகட்கும் செய்தி அனுப்பியுள்ளன. உதாரணமாக, 30-9-53-ல் வெளிவந்த பாரததேவி பத்திரிகை ஒன்றில் மட்டும், 45 சங்கங்களிருந்து அதன் காரியாலயத்திற்கு வந்த திரு.வி.க. அநுதாபச்செய்திகளைக் காணலாம். சுதேசமித்திரன், தமிழ்நாடு, ஹிந்து, தினமணி, விடுதலை முதலிய பத்திரிகைகளிலும், இது பற்றிய செய்திகள் பல வந்துள்ளன. இவ்வாறு எண்ணில் அடங்காதபடி தமிழ் முனிவர் திரு. வி. க. வின் பிரிவாற்றாமைக் கூட்டங்கள் நாடெங்கும் நிகழ்ந்துள்ளன. ... அவர் புகழ் ஓங்குக! அவர்களின் நன்னெ... ... வளர்க! தெய்வம் வாழ்க!''

Regd. M. 2330 "SIDDHANTHAM" Vol. 26—No.

# சமாஜ வெளியீடுகள்

பெரியபுராணம்—அகராதியுடன் ரூ.

சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் ... 5 0

திருப்போரூர்ச் சந்நிதிமுறை ... 1 0

திருவாசகம்-திருச்சதகம் (பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் பேருரை) ரூ. 8. அங்கத்தினருக்கு ... 0 1[illegible]

சித்தாந்த அஷ்டகம் (உரையுடன்) [சிவப்பிரகாசம் (பிற்பகுதி), திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது,] உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் இருபாஇருபது (மூலம்) 7 0

சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல. ... 0 [illegible]

சிவஸ்தல யாத்திரை மஞ்சரி ... 0 [illegible]

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. ... 0 [illegible]

வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

குறைந்த [illegible]க்கு விற்பனை

அடியிற் [illegible] 'சித்தாந்த' மலர் (1[illegible] இதழ்கள்) ஒன்[illegible] விதமும், முழு மலரல்லாத [illegible] இதழ் ஓர் அணா[illegible]கமும் [illegible]ற்கப்படும். வேண்டியவர் தபா[illegible] செலவுடன் முன்ப[illegible] அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

[மலர் 4 (1931), 14 (1941), 15 (1942), 24 (1951)].

Printed at the Sadhu Press, 16, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V. K. Punithavathi. Edited by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., and Published by S. Satchidanandam Pillay, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 192, Lloyd Road, Royapettah, Madras-14.

3. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் சமா
ஜத்தின் தலைமைப் பதவியை ராஜிநாமா செய்துவிட்டமை
யால் அவர்களுக்குப் பதிலாக, இராவ்சாஹிப் நல். முருகேச
முதலியார், B. A. (சென்னை அரசாங்கத் துணைக் காரிய
தரிசி) அவர்கள் சமாஜத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்
பட்டார்.

4. சமாஜத்தின் 49-ம் மகாநாடு சென்னையில்
இவ்வருஷம் டிசம்பர் மாதத்தில் கூடும். அம்மகாநாட்
டிற்கு இலங்கை அரசாங்கத்தின் வெளி நாட்டு அமைச்சர்
சர். கந்தையா வைத்தியநாதன் அவர்களைத் தலைமை
யேற்குமாறு கேட்டுக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

சமாஜத்தின் சைவப் புலவர் தேர்வு

பரிட்சை நவம்பர் மூன்றும் வாரம் நடைபெறும்.
முழுவிவரம் நவம்பர் 10-ம் தேதி வெளிவரும் சித்தாந்தத்
தில் பார்க்கவும்.

சமாஜ உறுப்பினர் - செயற்குழுக் கூட்டங்கள்

சமாஜ ஆண்டு விழா, மகாநாடு பற்றிய விவரங்களை
முடிவு செய்ய சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டம்
30-10-53 வெள்ளிக்கிழமை மாலை 6-மணிக்குச் சென்னை
இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை
யின் 'குகானந்த நிலைய'த்தில் கூடும். அன்று போதிய
நிறைவெண் இல்லாவிட்டால் அக்கூட்டம் அதே இடத்தில்
மறுநாள் 31-10-53 சனி மாலை 6 மணிக்குக் கூடி வந்திருந்
தோரைக்கொண்டு மாநாட்டு விவரங்களை முடிவு செய்யும்.
கூட்டத்திற்கு வர இயலாதவர்கள் தங்கள் கருத்தைக்
கடித வாயிலாகக் காரியதரிசிக்கு அறிவிக்கலாம்.

சமாஜத்தின் செயற்குழுக் கூட்டமும் மேற்படி சபையில்
31-10-53 சனிக்கிழமை மாலை 7 மணிக்குக் கூடி சமாஜ
ஆண்டுவிழா மாநாடு பற்றிய விவரங்களை முடிவு
செய்யும்.

சென்னை இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்த
ஜன சபையில் திரு. வி. க. மண்டபம்

இதற்கு நன்கொடையளிக்கும் அன்பர்கள் பணத்தை,
திரு. கல்கி. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்காவது, (32,
4-வது மெயின் ரோட், காந்திநகர் அடையாறு சென்னை),
அல்லது திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களுக்காவது
(192, லாயிட்ரோட், இராயப்பேட்டை சென்னை) அனுப்
பவும்.

யாரும் நீதிபதி சுப்பிரமணிய ஐயரும் திரு. வி. க. வின் தூய்மை, புலமை, சொல்வன்மை, பொதுநல நாட்டம் முதலிய அரிய பண்புகளைப் பற்றி அறியலாயினர். அவர்கள் மேற்கொண்டிருந்த அரசியற் பணிக்கு இவரையும் உறுதுணையாயிருக்குமாறு ஊக்கினர். இவர், அமைதியும் இன்பும் தந்துவந்த தம் தமிழாசிரியர் பதவியை அவ்வாண்டின் இறுதி மாதத்தில் நீத்து, "தேசபக்தன்" என்னும் புதிய பத்திரிகைக்கு ஆசிரியராய் அமர்ந்தார். புரட்சியும் கொந்தளிப்பும் நிறைந்த பொறுப்பைப் பொதுநலமொன்றே குறித்து மேற்கொண்டார். 1925-ல் காஞ்சியில் நடந்த தமிழ்நாட்டுக் காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமைவகித்தார்.

இப்புதிய பத்திரிகை வாயிலாகவும், பின்பு 1920ல் தாமே தொடங்கிய "நவசக்தி" வாயிலாகவும் திரு. வி. க. புரிந்த அரசியல் தொண்டும் தமிழ்த்தொண்டும் அளவிடற்கரிய சிறப்பினையுடையன. முதலில் பாலகங்காதர திலகரின் வீர சுயராஜ்ஜியக் கொள்கைகளைத் தமிழகத்திற் பரப்பினர்; நாடெங்கும் வீரவுணர்ச்சி எழுப்பினர். ரௌலெட் சட்டம் பிறந்தது. 'ஜலியன் வாலாபாக்' கொலை நிகழ்ந்தது. திலகர் திருவுருக் கரந்தார். மகாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கம் உருக்கொண்டெழுந்தது. திரு. வி. க காந்தி இயக்கத்தில் கலந்துகொண்டார். தமிழ்நாட்டில் காந்தீயக் கொள்கையைப் பரப்பியவர்களுள் திரு. வி. கவே முதன்மையானவர் என்பது மிகையன்று. லெனின், கார்ல் மார்க்ஸ், டால்ஸ்டாய் முதலியோர் கருத்துக்களையும் துருவியாராய்ந்தார். பிரம்மஞான சங்கத்தவரோடு நெருங்கிப் பழகி, அவர்கள் கண்ட உயர்ந்த தத்துவங்களையும் உணர்ந்தார். இங்ஙனம் தாமுணர்ந்த பிறநாட்டுப் பேரறிஞர் சீரிய கொள்கைகளைப் பண்டைத் தமிழ்ப் பண்பாட்டுடன் ஒற்றுமைப்படுத்திக் காட்டினர். திருவாசகமும் கிறிஸ்து சுவிசேஷமும் தம் உடம்பையும் உயிரையும் ஓம்பிய நூல்கள் என்று அவரே குறித்துள்ளார். பொருட்செறிவும், சொல்லழகும், வீரவுணர்ச்சியும் ததும்பும் கட்டுரைகளும், கேட்டவர்கள் உளத்தைப் பிணிக்கும் பேச்சுக்களும் பெருக்கெடுத்தன. தமிழில் ஒரு புது நடை தோன்றிற்று. அது அழகிய செஞ்சொற்களாலாகிய சிறு சிறு வாக்கியங்களைக் கொண்டதொன்று; இலக்கணப் பிழையற்ற இன்றமிழாய்



இயங்கியதொன்று. அது அவர் உணர்ச்சி வேகத்தைப் பிறருளத்தும் புகுத்தும் ஆற்றல் படைத்தது. அதனை அனைவரும் போற்றி வரவேற்றனர். பலர் அவரைப்போல் பேசவும் எழுதவும் முயன்றனர். தமது 18-வது வயதுமுதல் பல்வகைக் கூட்டங்களில் திரு. வி. க. செய்த சொற்பொழிவுகளிற் பல தமிழன்னைக்குப் புத்தணிகளாய் விளங்கின. தமிழ்ச் சோலை, இளமை விருந்து, தமிழ்த் தென்றல் என்னும் தொகுதி நூல்களில் இவற்றைக் காணலாம்.

திரு. வி. க. தாமே இயற்றிய புது நூல்களிற் பல சிறப்புவகையாற் பாராட்டப் பெறுவன. அவை, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை, முருகன் அல்லது அழகு, உள்ளொளி முதலியவை. திருக்குறள் முதற் பத்து அதிகாரங்கட்கு அவர் எழுதியுள்ள உரையும் புத்தம் புதிய கருத்துக்கள் பலகொண்ட தனிச் சிறப்புடையது. சில ஆண்டுகளாக, நவயுகம் போற்றும் நற்பெருங் கருத்துக்களைக் கொண்ட புதிய பாடல்கள் பல பாடி வெளியிட்டுள்ளார். இவைகளால் அவர் தமிழன்னைக்குச் செய்துள்ள தொண்டு சாலச் சிறந்தது.

இவர் இளமைதொட்டே, பிறப்பால் உயர்வு இழிவு காட்டும் பேதமையையும் கொடுமையையும் கண்டித்து வந்துள்ளார்; தமது நண்பர்களுடன் சேரிகட்குச் சென்று ஒழுக்கத்தையும் தெய்வபக்தியையும் பற்றி ஆர்வத்துடன் பேசி வந்தார். இயற்கையின் எழிலையும் பெண்ணினத்தையும் இழித்துரைக்கும் இடைக்காலக் கொள்கையை வன்மையாய் மறுத்துள்ளார். இவரது "பெண்ணின் பெருமை" என்னும் நூல் தமிழகத்துப் பெண்ணுலகில் ஒரு புனிதப் பேருணர்ச்சியை உண்டுபண்ணியுள்ளது. பெண்ணினம் இவரைத் தன் அன்பார் தந்தை என்று போற்றுகிறது.

ஏழைத் தொழிலாளர்கட்குத் திரு. வி. க. செய்துள்ள நன்மைகள் என்றும் மறக்கற்பாலன அல்ல. ஏழைகள், தம்மைக் காக்கப் பிறந்த கனிவுடைத் தலைவர் என்று இவரைப் போற்றுகின்றனர். தொழிலாளர் இயக்கத்தில் இவர் பல்லாண்டுகளாகத் தீவிரமாய் அஞ்சாது உழைத்தமையின் பயனாக, இந்தியாவின் முதல் தொழிலாளர்